விலை ரூபா 1-50

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆவணி 31 ஜமுஹரம் 21 இதழ் 201

யாழ்ப்பாணம் புதன்கிழமை 16-9-1987

## அனைத்து போராளி குழுக்களையும் இந்திய அதிகாரிகள் இன்று சந்திப்பார்கள்

[சென்னை]

இலங்கையில் வடக்கு-கிழக்கில் தமிழ் போராளிகள் குழுக்களிடையே இடம்பெறும் மோதல்களை முடிவிற்குக் கொண்டுவரும் பொருட்டு சென்னையிலுள்ள அனைத்து போராளிகள் குழுக்களையும் இந்திய அதிகாரிகள் இன்று சந்திப்பார்கள்.

இப்பகுதியில் இடம்பெறும்

(10ம் பக்கம்பார்க்க)

## ஆயுதங்களையும் ஒப்படைத்திருந்தால் கொலைகளுக்கு இடமிருந்திருக்காது"

### இந்திய அரசு கூறுகிறது

[புதுடில்லி]

"இலங்கைத் தமிழ்போராளிக் குழுக்கள் தம்மிடமிருந்த அனைத்து ஆயுதங்களையும் ஒப்படைத்திருந்தால் தற்போது இடம்பெற்றுவரும் கொலைகளுக்கு இடமிருந்திருக்க மாட்டாது'' என்றுஇந்திய அரசு தெரிவித்துள்ளது.

இலங்கையில் வடக்குகிழக்கு மற்றும் தமிழ்ப் பகுதிகளில்

(9ம் பக்கம் பார்க்க)

# உண்ணாவிரதப் போராட்டம்

# நேற்று ஆரம்பம்!



(எம். வாமதேவன்)

**தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் இயக்க அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் திரு. இ. திலீபன் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை நேற்றுக் காலை பத்து மணிக்கு ஆரம்பித்தார்.**

நல்லூர்கந்தசுவாமி கோவில் வடக்குவீதியில் கிழக்குப்பக்கத்தில் இதற்கென அமைக்கப்பட்ட பந்தலில் திரு. திலீபன் தமது உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார்.

ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து இந்த உண்ணாவிரதப் போராட்டம் தமிழீழ விடுதலைப் புலிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்போராட்டத்தின் முதற்கட்டமே திலீபனால் தொடக்கிவைக்கப் பட்டுள்ள நேற்றைய சாகும்

(10-ம்பக்கம் பார்க்க)

## அரச அலுவலகங்கள் முன் இன்று மறியல்போராட்டம்

(யாழ்ப்பாணம்)

"இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து தமிழீழ மக்களின் அபிலாஷைகளை புறக்கணிக்கும் வகையில் சிறீலங்கா அரசு தனது ஒடுக்குமுறை நிர்வாகத்தை தமிழீழ மண்ணில் மீழப் புகுத்தும் நடவடிக்கைகளையும், வட கிழக்கில் இடம் பெறும் சிங்களக் குடியேற்றங்களையும், அவற்றிற்கு துணைபோகும் இந்திய அரசின் நிலைப்பாட்டையும் ஆட்சேபித்து இன்று புதன்கிழமை தொடக்கம் யாழ். குடா நாடெங்கும் தொடர்ச்சியான மறியற்

[9ம் பக்கம் பார்க்க]

### வடக்கு, கிழக்கில் நடக்கும் மோதல்கள்

## 150 பேர் பலி; 50 பேர் காயம்

### 200 பேர் முகாம்களில் தஞ்சமாம்

[கொழும்பு]

வடக்கு - கிழக்கில் கடந்த சில தினங்களாக இடம்பெற்ற போராளிகள் குழுக்களிடையே யான கடும்மோதல் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில தினங்களாக வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற இம் மோதல்களில் சுமார் 150 பேர்வரை கொல்லப்பட்டதாகவும் பொதுமக்கள் உட்பட 50 திற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாக

(9ம் பக்கம் பார்க்க)

### சிறைக்கைதிகளை விடுவிக்காவிடின்

## அரசாங்க நிர்வாகத்தை ஸ்தம்பிக்கசெய்வோம்

### 'கைஸ்' எச்சரிக்கை!

(நமது நிருபர்)

சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். இல்லையெனில் எமது பிரதேசத்தில் அரசநிர்வாக அமைப்பை ஸ்தம்பிக்கச் செய்யும்விதத்தில் தொடர்ச்சியான போராட்டம் நடத்தப் படும் என மாணவர் இளைஞர் பொது மன்றம் இலங்கை அரசுக்கு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர்மூலம் வழங்கியுள்ள மகஜர் ஒன்றில் அறிவித்துள்ளது.

(9ம் பக்கம் பார்க்க)

### மகாவலித் திட்டத்தின்கீழ்

## தமிழ்ப்பகுதியில் 30,000 சிங்களக் குடும்பங்கள்!

[கே. கேசவநம்பி]

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு - பொலநறுவ எல்லையில் வெலிகந்தவிலிருந்து முல்லை. மாவட்டத்தில் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் வரை மகாவலி இடதுகரை அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் 30,000 சிங்களக் குடும்பங்களை குடியேற்றும் பணியை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

இத்தகவலை குறித்த மாவட்

(9ம் பக்கம் பார்க்க)

### சிறைக்கைதிகளை விடுவிக்கக்கோரி

## 'கைஸ்' நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்

[அலுவலக நிருபர்]

தென்பகுதிச் சிறைகளில் வாடும் அரசியல் சிறைக் கைதிகளை விடுதலைசெய்யக் கோரு மாணவர் இளைஞர் பொதுமன்

(9ம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த நோர்வே வெளிநாட்டமைச்சு குழுவுக்குத் தலைமை தாங்கி வந்துள்ள அதிகாரி யாழ். அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்துடன் கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.

## அரசு சார்பற்ற பொது நிறுவனங்களுக்கு நோர்வே தாராள உதவி

[கா. யோகநாதன்]

"நோர்விஜியன் அரசு புனரமைப்பு வேலைகளுக்காக இலங்கைக்கு முன்றரைக் கோடி நோர்விஜியன் குரேன் வழங்கவுள்ளது. இதில் அரசு சார்பற்ற பொது ஸ்தாபனங்களிடம் ஒரு கோடி குரேன் வழங்கப்படும்.''

யாழ்ப்பாணத்தில் நடந்த பாதிப்புக்களைப்பற்றி பொது ஸ்தாபனங்களிடம் நேரில் தெரிந்துகொள்வதற்காக வந்திருந்த நோர்வேஜியன் வெளிநாட்டமைச்சரின் ஆலோசகர் திரு. ரவுண்ட் பௌவில் நேற்றுத் தெரிவித்தார்.

யாழ். அரசாங்க செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தலைமையில் நடந்த இம்மாநாட்டில் நோர்விஜியன் குழுவினர் பங்குபற்றினர். இம்மாநாட்டிலேயே மேற்கூறிய தகவல் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாட்டு அமைச்சரின் ஆலோசகருடன் பிரதி மாஅதிபர் ஏல்பிட்டர், விசேட ஆலோசகர் கிரட்சன் பிளெஸ்ரஸ், மற்றும் ஜெருபர்ட் சலமன், சபினஸ் கசன்பி ஆகியோரும் வந்திருந்தனர்.

(9ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Christambo Farm புறொயிலர் குஞ்சுகள் 17 ந் திகதி வியாழக்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்க. ஒருவார Hy–Line வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள், Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். சி 1109

நாஷனல் (300, 370, 7000) வீடியோ டெக் மெக்கானிக்கல் உதிரிப்பாகங்கள், I C க்கள், (Board ஆகவும் பெற்றுக்கொள்ளலாம்) சகல ரெலிவிசன் ரியூப், ரியூனர், கபினெற் Fly back, என்பன உடன்விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம். (சி 1135)

நல்லின வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. உருத்திரன், மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில்கிழக்கு, கொக்குவில். (சி 1146)

திருமண பட்டுப்புடவைகள் காஞ்சிபுரம், ½X½, சில்க் அன் சிபோன், கொட்டன், காஞ்சிபுரம் போன்ற நவீன சேலை வகைகளை பெற்றுக்கொள்ள: அரஸ் ஜவுளியகம், 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24001.
சி-0130

மருதனுமடத்தில் இருந்து உடுவிலுக்குச் செல்லும் தெருவில் 300 யார் தூரத்தில் சங்கிலிப்புலம் என்றகாணி, நிலப்பரப்பு 8, விற்பனைச்கு உண்டு. தொடர்புகொள்ளவும்: பொ. ஜெயராசசிங்கம், மே/பா M. சின்னத்தம்பி, நாவலடி, ஏழாலை மேற்கு, சுன்னுகம்.
சி-1086

சகல விதமான பாவித்த வீட்டுத்தளபாடங்கள், கட்டில் மெத்தைகள், அல்மாரி கசற்றேடியோ, சாப்பாட்டு மேசைகள், வெளிநாட்டு கதவு பூட்டுகள், எவர்சில்வர், கிளாஸ் வகைகள் Pressure Cooker, சிங்கப்பூர் உடுப்புகள், Show case, கண்ணுடி சேசைகள் மற்றும் பல உடன் மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம். சி-1163

கிளிநொச்சி 8-ம் வாய்க்காலில் ஒரு ஏக்கர் காணியுடன் வீடுவளவும் இரண்டு ஏக்கர் வயல் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மனேஜர், அனிதா பேக்கரி, கண்டி வீதி, கிளிநொச்சி.
சி-1142

யாழ்ப்பாணம் றக்கா வீதியில் 3 பரப்பு சதுர காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: எஸ் பாக்கியநாதன், 'பிளான்ட் பரடைஸ்'' 152/2 [78/2] கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
சி-1167

Prima Farm Lohmann சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறேயிலர் குஞ்சுகள், Christambu Farm சிவப்பு பேட்டுக்குஞ்சுகள், சேவல் குஞ்சுகள். புறேயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் விநியோகிக்கப்படும் அத்துடன் 1 வாரம் தொடக்கம் 1 மாத பேட்டுக் குஞ்சுகளும் பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், நல்லூர். சி-1188

## தவறிவிட்டது

சென்ற சனிக்கிழமை 12-05-87 12 மணியளவில் 782 பாதை இலக்க காரைநகர் பஸ்ஸில் ஒரு தொகைப்பணம் தவறிவிட்டது தயவு செய்து கண்டெடுத்தோர் பின்வரும் முகவரிக்கு தயவு செய்து ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். எம். சுப்பிரமணியம் வழக்கம்பரை.
(சி 1182)

சுதுமலை தெற்கைச் சேர்ந்த பெரியதம்பி மணிராஜ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை நாவலர் றேட்டுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது கண்டு எடுத்தவர்கள் அண்ணமலை வைத்தியசாலை சுதுமலை தெற்கு என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி 1173)

## FOR SALE

House at No. 105, Chapel Streiet with all modern facilites and an annexe situated in an ideal spot. Contact; 40/2, Temple Road Lane Jaffna. C-1156

## வாடகைக்கு

ஆனைப்பந்தியில் (பருத்தித்துறை வீதி) நல்ல சூழலில் அமைந்துள்ள வீட்டில், அறையொன்று வாடகைக்கு விடப்படவுள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் விரும்பத்தக்கது. ஏனையோரும் விண்ணப்பிக்கலாம், நேரில்வரவும். தொடர்பு கொள்க: 117, சிவப்பிரகாசம் வீதி, வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம். சி-1168

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் தாமோதரவிலாஸ்க்கு முன்பாக நல்ல விஸ்தீரணம் உள்ள கடை வாடகைக்கு உண்டு. விபரம்: 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சி-1122

யாழ் கஸ்தூரியார் ஒழுங்கையில் இல 16-ல் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு கொடுக்கப்படும் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம் N. இந்திரகுமார் இல 16, கஸ்தூரியார் ஒழுங்கை யாழ்ப்பாணம். (சி 1184)

## பயிற்சிகள்

Computer Programming in Basic Language, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பயறிங், வயறிங், றீவைண்டிங், Draughtsman ship ஆகிய பயிற்சிகள் கூடியநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும் ஆரம்பம்: 18- 09- 87 Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
[சி- 1134]

Radio- T V, வெல்டிங், வயறிங், பிளம்பிங், வைண்டிங், மோட்டமெக்கானிசம், தட்டெழுத்துச் சுருக்கெழுத்து புதியபிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. செய்முறை, அறிமுறைப் பயிற்சிகளுடன் சர்வதேச அங்கிகாரம் பெற்ற சான்றிதழ்களும் வழங்கப்படும் Vispa Engineering Aid Hall' 328, நாவலர் வீதி, [ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்] யாழ்ப்பாணம். [சி- 1158]

## யாருடையது

கிராண்ட் சம்பியன் துவிச்சக்கரவண்டி ஒன்று மானிப்பாய்-யாழ்ப்பாணவீதி விஸ்கம் கூல் ஸ்பொட் எனும் விலாசத்தில் இரண்டு வாரங்களாக அநாதரவாக உள்ளது. உரியவர்கள் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.
சி-1183

## சோதிடம்

16-9-87 தொடக்கம் சனி மாற்றத்தின் பலா பலன்களை அனுபவிக்கப் போகிறீர்கள். உடன் வாங்கிப் படியுங்கள். சனிமாற்றம் உங்களுக்கு எப்படி? சோதிடர் ஆ. சிவராசா, வேலணை. [சி 1190]

## வகுப்புக்கள்

Spoken English with Grammar by திரு. றெஜினேல்ட் ஆரம்பம்: 21- 9- 87 பி. ப. 3-00 மணி. விபரங்களுக்கு: Jaffna Technical Institute, 52/1, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
]சி-1138]

## தேவை

யாழ். பஸ்நிலையம் முன்பாக இயங்கிக் கொண்டிருக்கும் ஸ்தாபனத்துக்கு லிகிதராகக் கடமையாற்றக்கூடிய அநுபவம் வாய்ந்த பெண் ஒருவர் தேவை. விபரங்கட்கு: விளம்பர இல. சி 1131, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். சி-1131

முருகன் ஆலயத்திற்கு உதவி ஐயர் உடன்தேவை. தகைமைகளைப் பொறுத்துச் சம்பளம் வழங்கப்படும் தொடர்பு: எஸ். ஆர். குருக்கள், பிரான்பற்று முருகன் ஆலயம், பண்டத்தரிப்பு. (சி 1154)

எமது உற்பத்திப் பொருள்களை [ஜெலி, கஸ்ராட் பவுடர், பேக்கிங் பவுடர், குளுக்கோஸ் ஆகியன] வட, கிழக்கு மாகாணங்களில் வானில் சென்று விற்பனை செய்யக்கூடிய ஆற்றல் உள்ள ஆங்கில அறிவுள்ள [முன் அனுபவமுடையவர் மட்டும்] விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. சம்பளத்துடன் கொமிஷனும், பட்டாவும் வழங்கப்படும். உரிய சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும். ''Rolax Industries'' றொலக்ஸ் இன்டஸ்றீஸ், 222 A, கஸ்தூரியார் வீதி, (ராதிகா ஜுவலர்ஸ் மேல் மாடி), யாழ்ப்பாணம்.
(சி 1159)

யாழ். நகரில் ½மைல் சுற்றுடலில் பிரதான வீதிகளுக்கு அண்மையில் அலுவலகத்துக்கு ஒரு அறை, ஒரு விருந்தை அடங்கிய பகுதி வீடு வாடகைக்கு உடன் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. சி 1185 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.
(சி 1186)

வீட்டுக்குத் தேவையான மரத்தளபாடங்கள் செய்ய வல்ல தொழிலாளர்கள் உடன் தேவை. தளபாடவகைகள் செய்கூலி நியாயமான முறையில் தரத்துக்கு அமையத் தரப்படும். பத்மநாதன், பிறீ மல்ரி சேவிஸ், திருநெல்வேலி வடக்கு. (சி 1185]

யாழ். பஸ்நிலைய அருகாமையில் உள்ள ஸ்தாபனம் ஒன்றிற்கு பெண் லிகிதர் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும், விளம்பர இல. சி 1181 மே/பா, ஈழநாடு யாழ்ப்பாணம். [சி 1181)

## மணப்பந்தல்

யாழ். இந்து உயர் வேளாள குடும்பத்தைச்சேர்ந்த 37க்கும் 46வயதுக்குமிடைப்பட்ட திருவோணம் அல்லது புனர்பூசம் அல்லது அச்சுவினி நட்சத்திரத்தில் பிறந்த செவ்வாய் குற்றமற்ற சமயபற்றுள்ள நன்குகற்ற மணமகள் அதே குடும்பத்தைச் சேர்ந்த நிர்வாக அதிகாரி ஒருவருக்கு தேவை. சகல விபரங்களையும் உடனடியாக அனுப்பிவைக்கவும். விளம்பர இல. சி-1169, ம/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-1169)

## வகுப்புக்கள்

பாலராசியர் பயிற்சி புதிய வகுப்பு விரைவில் ஆரம்பமாகின்றது. க. பொ. த. (சா/த) குறைந்த தகைமையாகும். சனி, ஞாயிறு, தினங்களில் வகுப்பு நடைபெறும். நேரில் சமுகமளித்து கற்கமுடியாதோர் தபால் வழியும் பயிலலாம். பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். பாலர் ஆசிரியர் சங்கம், 42, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(சி 1187)

A/L 88 இரசாயனம், 108, Brown Road, யாழ்ப்பாணம். ஆசிரியர் சத்தீஸ், மீட்டல் வகுப்பு பிரிவு I, ஆரம்பம்: 19-9-87 சனி 2-30 p. m. சனி, ஞாயிறு 2–30p m. –4-45p m. முழுப்பாடத்திட்டமும் முடிக்கப்படும். சி-1176

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

ஏழாலை சூராவத்தையைச் சேர்ந்த சுப்பையா சுந்தரலிங்கம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்
சுப்பையா சுந்தரலிங்கம் கைம்பெண் தவமணிதேவி– சூராவத்தை ஏழாலை.
மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம்
இல. T 324

எதிராக

பராயமற்றவர்
1. சுந்தரலிங்கம் மகள் சுதர்சி
,, 2. சுந்தரலிங்கம் மகள் சுபதினி
,, 3. சுந்தரலிங்கம் மகள் சுஜிதா–
எல்லோரும் சூராவத்தை இவர்கள் பராயமற்றவராக இருப்பதால்தங்கள் வழக்கிற்கான பாதுகாவலராக நியமிக்கப்படவிருக்கும் 4ம் எதிர்மனு மனுதார் மூலம்
4. சுப்பையா இராசா சூராவத்தை
எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர்குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1987ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14ம் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்முன தாக்கப்படலாகா தென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்ற கட்டளைப்படி
வி இராமச்சந்திர ஐயர்
பதிவாளருக்காக

1987ம் ஆண்டு ஒகத்து மாதம் 27ஆந்நாளாகியஇன்று தேதியிடப்பட்டது.

என்னுல்வரையப்பட்டது:
செ. இராமலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி
(சி 1111)

## பதவி உயர்வு

(சுண்டுக்குளி)

யாழ். செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தர் தரம் இரண்டில் பணியாற்றிய எஸ் பாலரத்தினம் இம்மாதம் முதல் காரியாலய உதவியாளராகவும். நிர்வாக உத்தியோகத்தராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

## 'திறமைகளை பாராட்ட தவறக்கூடாது'

(பண்டத்தரிப்பு)

'எங்கள் கோவில்களில் சேவை செய்யும் சிவாச்சாரியர்களை ஊக்குவித்து அவர்களை கல்வி அறிவில் ஈடுபடச் செய்து சிறந்த பணியாற்றுவதற்கு இவ்வாறுன நிகழ்ச்சிகள் பேருதவியாக இருக்கும் அவர்கள் மத்தியில் காணும் திறமைகளை நாங்கள் பாராட்டத் தவறக்கூடாது.''

வட்டு கிழக்கு முத்துமாரியம்மன் ஆலயத்தில் பிரம்மஸ்ரீ சா. ஜெகதீஸ்வர சர்மாவுக்கு ''சாகித்திய சங்கரர்'' என்ற பட்டத்தை வழங்கி உரையாற்றுகையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் க. அருணுசலம் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் தமதுரையில் எமது சைவ ஆலயங்களில் இடம்பெறும் கிரியைகள், வழிபாடுகள். என்பன பற்றிய பூரண விளக்கங்களை இன்றைய இளம் சந்ததியினர் நன்கு அறிந்து கொள்ளவேண்டும் என்முர்.

புன்னலைக்கட்டுவன் பிரம்மஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள் உட்பட மற்றும் பலர் பாராட்டுரை வழங்கினுர்கள்.

## நிர்வாகிகள்

(மாவிட்டபுரம்)

பலாலி மக்கள் நலன் கருதி ''பலாலி நலன்புரிச் சபை'' அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. அதன் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

போஷகர்கள்: வி. இரத்தினராஜா அப்போஸ்தலர் ஏ. ஜோன்பிள்ளை, தலைவர்:- கே. ரி. இராஜரட்ணம், உப தலைவர்; வே. செல்லத்துரை, செயலாளர்: வி. தனலிங்கம், உபசெயலாளர் கி. மரியதாஸ், பொருளாளர்: சி. விஜயரட்ணம். 9பேர் கொண்ட நிர்வாகசபையும்தெரிவானது.

★

மயிலிட்டி திருப்பூர் ஒன்றிய செல்வா சனசமூக நிலைய வருடாந்தக் கூட்டம் திரு. க. தங்கலிங்கம் தலைமையில் நடந்த சமயம் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவாசினர்.

தலைவர்: க. தங்கலிங்கம், உப தலைவர்: வ. சிவானந்தம், செயலாளர்: மு. இரத்தினவடிவேல், பொருளாளர்: வ. ஜெயபாலசிங்கம், 5 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது.

★

தெல்லிப்பழை செல்வா ஐச்கிய கலாசார சனசமூக நிலைய பொதுக்கூட்டம் நிலைய மண்டபத்தில் இடம்பெற்ற சமயம் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவாகினர்.

ஆலோசகர்: இ. தம்பு, போஷகர்: வே. அருள்ஞானசுந்தரம், தலைவர்: சொலமன், உப தலைவர். லெனின்ராஜ், செயலாளர்: பி. இராமச்சந்திரன், உப செயலாளர் டே. தேவசகாயன், பொருளாளர்: நா. நவரத்தினம், கணக்குப் பரிசோதகர்: சு. திவாகரன் 5 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது.

# அரிசோனு மாநிலத்தில் பாப்பரசர் கூட்டத்தில் துப்பாக்கி நபர்!

வாஷிங்டன், செப் 15.

**பரிசுத்தபாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் அமெரிக்காவின் அரிசோனு மாநிலத்தில் பீனிக்ஸ் என்ற இடத்தில் கலந்து கொண்ட கூட்டமொன்றில் நபர் ஒருவர் துப்பாக்கியுடன் நின்றிருக்கக்காணப்பட்டார். இவர் உடனடியாக மடக்கிப் பிடிக்கப் பட்டார்.**

பாப்பரசரின் இச்கூட்டம் தேற்று இடம்பெற்றது. கைத் துப்பாக்கியுடன் காணப்பட்டனர்.

அந்நபரிடம் பாப்பரசருக்கு எதிரான பல பிரசுரங்களும் இருக்கக் காணப்பட்டன.

இப்பீனிக்ஸ் நகரக்கூட்டத்தில் சுமார் 2 லட்சம் மக்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நின்றவர்கள் பாப்பரசரின் உரையைக் கேட்டு மகிழ்ச்சி ஆரவாரஞ்செய்த

பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந் தன. குண்டு துளைக்கமுடி யாத மோட்டார் வாகனத்தி லேயே பாப்பரசர் தமது அமெரிக்க விஜயத்தின் பெரும் பகுதியை மேற்கொண்டுவருகிருர்.

# ‘எய்ட்ஸ்’ நோயாளிகளை அன்புடன் ஆதரிக்கவும்!

## கத்தோலிக்கர்களிடம் பாப்பரசர் வேண்டுகோள்

வாஷிங்டன், செப்15.

“கத்தோலிக்கர்கள் ‘எய்ட்ஸ்’ நோயாளிகள் மீது அன்பும் ஆதரவும் காட்ட வேண்டும்” என்று பரிசுத்த பாப்பரசர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரிசோனு மாநிலத்தில் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த டாக்டர்கள், சுகாதாரசேவையாளர்கள் மத்தியில் உரைநிகழ்த்திய போதே பாப்பரசர்மேற்கண்டவேண்டு கோளை விடுத்தார்.

அவர் தமது உரையில் மேலும், ‘எய்ட்ஸ்’ நோயாளிகள் அன்புடனும், ஆதரவுடனும் நேசிக்கப்பட வேண்டியவர்கள், அவர்களை எவரும் வெறுக்கவோ ஒதுக்கவோ கூடாது” என்ருர்.

பாப்பரசர் தொடர்ந்து பேசியதாவது;- “கருச்சிதைவு செய்து கொள்வதை கத்தோலிக்கர்கள் தவிர்க்கவேண்டும். இது ஒரு கொலைக்கு ஒப்பான செயலாகும்” என்ருர்.

பரிசுத்தபாப்பரசர் சன்பிரான்ஸிஸ்கோ நகரில் உள்ள எய்ட்ஸ் நோயாளிகளையும் பார்வையிட உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

## திருமலை அகதிகள் திரும்புகின்றனர்

[சுண்டிக்குளி]

திருமலையிலிருந்து அகதிகளாக வந்தவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியவண்ணமுள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினுல் தமது வீடு வாசல்களை இழந்து அகதிகளாக வந்து யாழ். குடாநாட்டில் தங்கியிருந்தவர்களில் சுமார் இருநூறுக்கும் அதிகமான குடும்பங்கள் இதுவரை மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ளதாக யாழ். செயலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கைகள்மூலம் தெரியவந்துள்ளது.

## மீளப் பெற்றனர்

(பலாலி)

மயிலிட்டிகரை பிரஜைகள் குழு எடுத்துக்கொண்ட முயற்கியால் மூன்று கடற் தொழிலாளர்கள் தமது வெளி இணைப்பு இயந்திரங்களை மீளப்பெற்றுள்ளனர்.

# திருமலை உடனடி புனரமைப்புக்குநிதிஒதுக்கீடு!

[திருகோணமலை]

புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்னுந்து கடந்த சனிக்கிழமை உலக வங்கி அதிகாரிகளுடன் திருகோணமலைக்கு வருகை தந்தபோது திருகோணமலை மாவட்டத்தில் உடனடியாக எடுக்கவேண்டிய புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக 45 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளார்.

திருமலைக் கச்சேரியில் அன்றையதினம் இடம்பெற்ற மகாநாட்டில் வைத்தே இத்தொகையை அவர் வழங்கினுர்.

இந்த மகாநாட்டில் ஒவ்வொரு இலாகாக்களுக்கும் ஏற்பட்ட இழப்பு, அழிவு, நஷ்டம் தொடர்பாக ஆராயப்பட்டது.

அவசரமாக எடுக்கவேண்டிய புனரமைப்பு நடவடிக்கைகள் விரிவாக ஆராயப்பட்டு ஒவ்வொரு இலாகாவிற்கும் ஒரு தொகையாக வழங்கப்பட்டது. கல்விச் சேவைகளுக்காக 35 லட்சம் ரூபாவும், சுகாதார சேவைகளுக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், விவசாய நடவடிக்கைகளுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரமும், உரக்கூட்டுத்தாபனத்திற்கும், போக்குவரத்து சேவைகளும் உடனடியாக மேற்கொள்வதற்கு நிதி உதவி வழங்கப்பட்டது.

# வலிகாமம் வடக்கில் வயிற்ரேட்ட நோய்!

(பலாலி)

வலிகாமம் வடக்குப் பகுதியில் வயிற்ரேட்ட நோய் வேகமாக பரவி வருகிறது.

சிறு பிள்ளைகளே இவ் நோயினுல் மிக கூடுதலாக பீடிக்கப் பட்டுள்ளார்கள்.

குறிப்பாக மயிலிட்டி,பலாலி பகுதிகளில் மிக கூடுதலாக இந்த நோய் பரவியுள்ளது.

நாளொன்றுக்கு வயிற்ரேட்ட நோயினுல் 50க்கு மேற்பட்ட குழந்தைகள் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

## அரச நிவாரணம் இடைநிறுத்தம்

[யாழ்ப்பாணம்]

இராணுவ நடவடிக்கைகளினுல் பாதிக்கப்பட்ட வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள தெல்லிப்பழை கிழக்கு, அளவெட்டி, மல்லாகம் ஆகிய பகுதிமக்களுக்கு அரச நிவாரண உதவி இன்னமும் கிடைக்கவில்லை. என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெல்லிப்பழைப்பகுதி மக்களுக்கு ஆறுவாரகால இலவச நிவாரணப் பொருட்கள் வழங்கப்படவேண்டுமென்று புனர்வாழ்வு அமைச்சு அறிவித்திருந்த போதும் தெல்லிப்பழைகிழக்குப்பகுதி மக்களுககு மூன்றுவாரகால இலவச உணவுப் பொருட்கள் மட்டும் வழங்கப்பட்டுள்ளது. மிகுதி மூன்று வாரகால உணவுப்பொருட்கள் இவர்களுக்கு வழங்கவில்லை. [வா]

# புகை, சாம்பலற்ற ஒரு புதியரக சிகரெட்!

புகை குறைவான, சாம்பல் ஏற்படாத புதியரக சிகரெட் ஒன்று அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

‘ரேனேல்ட்ஸ்’ என்ற பிரபல சிகரெட் தயாரிப்புக் கம்பனி இப்புதியரக சிகரெட்டைக் கண்டுபிடித்துள்ளது.

‘நிக்கொட்டின்’ போன்ற சிகரெட்டில் காணப்படும் உடல் நலத்துக்குத் தீங்கு விளைவிக்கும் வஸ்த்துக்கள், மற்றும் ஏனைய கெடுதியான அம்சங்கள் இப்புதிய ரகத்தில் காணப்படவில்லை என்று தெரிவிக்கப் பட்டது.

புகைப்பதால் ஏற்படும் தீங்கைக் குறைக்கும் வகையில் மேலும் விரிவான ஆராய்ச்சிகள் இந்த சிகரெட் மீது செய்யப்பட்டு வருகின்றன. ஆயினும் விரைவில் இதனை சந்தைக்குவிட மேற்படிகம்பனி தயாராக இருப்பதாக கூறப்பட்டது.

## “நல்லொழுக்கங்களைப் பின்பற்றவேண்டும்”

(யாழ்ப்பாணம்)

“எல்லா அபிவிருத்திக்கும் மூலகாரணமாக அமைவது ஒழுக்கத்தை வளர்க்கும் பணியே. பெற்ரேரும், ஆசிரியர்களும் மாணவரது ஒழுக்கத்திற் கவனம் செலுத்தாவிட்டால் சமூகத்தில் மாணவர்கள் சஞ்சலத்துடனே வாழவேண்டிய நிலைஏற்படும். சகல மதங்களும் போதிக்கும் நல்லொழுக்கங்களை மாணவர் சமுதாயம போற்றிப் பின்பற்ற வேண்டும்”.

இவ்வாறு யாழ். வண்ணுர் பண்ணை இளையதம்பி தமிழ் வித்தியாலயத்தில்நடைபெற்ற தருமவார நிகழ்ச்சியில் உரையாற்றிய வட்டாரக்கல்வியதிகாரி சு. சிவநாயகமூர்த்தி குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் கா. கணேசதாசன் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

வளைகுடா சென்ற-----

# ஐ. நா. செயலாளர் குழு ஏமாற்றத்துடன் திரும்புகிறது

பக்தாத், செப். 15

ஈரான் - ஈராக் ஆகியவற்றுக்கிடையிலான வளைகுடாப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் இருநாடுகளுக்கும் நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்ட ஐ. நா. செயலாளர் தலையிலானகுழு எதுவித நல்ல முடிவையும் காணுத நிலையில் ஐ. நா திரும்பியுள்ளது.

ஈரான் தலைவர்களையும், ஈராக்கிய தலைவர்களையும் ஐ. நா. செயலாளர் ஜாவியா பெரஸ்டி கொய்லர் சந்தித்தார். ஆனுல் இருநாட்டினரும் தத்தமது நிலையில் விடுபடுவதாக இல்லை. இருவரும் ஒருவரை ஒருவர் சாடுகின்றனர். அத்துடன் போரை முடிவுக்கு கொண்டுவர விருப்பமற்றவர்களாவே காணப்படுகின்றனர்.

ஐ. நா. செயலாருடன் சென்ற குழுவினர் கருத்து வெளியிடுகையில், வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை.

ஈரானிய தரப்பில் நல்ல சூழ்நிலை ஒன்று தோன்றிய போதிலும், அது பின்னர் கலைந்து விட்டது என்றனர்.

# இன்றைய பலன்

மாதம்—ஆவணி
திகதி—31(1987-9-16]
கிழமை—புதன்
திதி—நவமி மு. இ. வரை
நக்ஷத்திரம்— திருவாதிரை பி. இ.

மேடம்: இலக்கிய நோக்குடன் செயலாற்றுவீர்கள், சிலருக்கு வாகனசுகமும் உண்டு, வாழ்விலும் திருப்தியுண்டு.

இடபம்: உள்ளத்தில் உவகைக்கூத்து, வாழ்க்கை இன்று உற்சாகம் நிரம்பியதாகவிருக்கும், முதலீடு செய்வதற்கு உகந்ததினம்.

மிதுனம்: அமைதிக்குப் பங்கம் ஏற்படும், பிறர்விடயத்தில் தலையிடாதிருக்கவும், குடும்பநிலைப்பிரிவும் ஏற்படலாம்.

கடகம்: உடல் நலம் பாதிக்கப்படலாம், வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ள நேரிடும் கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும்.

சிங்கம்: குடும்பத்தில் குதூகலிப்பு. தொழில் சமவிருத்தி. வாகன நலனும் உண்டு, கல்வி முன்னேற்றத்திற்கும் இடமுண்டு.

கன்னி: சகோதர சஞ்சலம் வீண்பழி இவற்றிற்கும் இடமுண்டு, குடும்பத்திலும் பொறுமையுடன் நடந்து கொள்ளவும் இன்று சயோசித புத்திவிரும்பத்தக்கது.

துலாம்: அன்னையின் ஆசியுமுண்டு. அன்னியர் உதவியுமுண்டு. வாகனநலனும் வணிகர்களுக்கு வளமான திருப்தியுமுண்டு.

விருச்சிகம்: பிள்ளைப்பாசம் தலைதூக்கிநிற்கும். வாழ்க்கையிலும் புதிரானநிலை தென்படும். செய்காரியத்திலும் புகழ்கிட்டும்.

தனுசு: எதிலும் தாக்கு மனப்பான்மை தோன்றும். பணம் பல வழிகளிலும் செலவாகும். உமது நடவடிக்கைகளை எதிரிகள் வேவு பார்ப்பர்.

மகரம்: களஸ்திரவழி சுகம் உண்டு. எண்ணிய கருமமும் கைகூடலாம். திடீர் பிரயாணமும் ஏற்படலாம். சுபதினம்.

கும்பம்: தூரதேச வாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும். கடன் தொல்லை அதிகரிக்கும். வைத்தியச் செலவுமுண்டு. அமைதி நன்று.

மீனம்: பிதாவழித் தனவரவுமுண்டு. பிரிந்தவர் இன்று இணைவர். பதவியுயர்வுக்கும் வழிகோலப்படலாம். சுமாரனதினம்.

திருமலை
வே. இரவீந்திரன்

## குழாய்க்கிணறு: நிதிசேகரிப்பு

[சாவகச்சேரி]

மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட மகாவித்தியாலயத்திற்கு ஒரு குழாய்க்கிணறை அமைப்பதற்காக இப்பாடசாலையின் அபிவிருத்திச் சபை நிதிசேர்க்கும் பணியை ஆரம்பித்துள்ளது.

இப்பாடசாலையின் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளிடம் இருந்து ரூபா 20.000 திரட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சபையின் செயலாளர் திரு. பாக்கியலிங்கம் தெரிவித்துள்ளார்.

### மணிவாக்கு

பணக்காரனுக்கிட்ட நிற்காதே;
அவன் உன்னை அழித்துவிடுவான்
மிக எட்டத்திலும் போகாதே -
அவன் உன்னை மறந்துவிடுவான்.

— அனுறின் பெவான்

## நமது நோக்கு

# 'தாய்கம் வேண்டிநிற்கும் தமிழ்மக்கள்

'ஆயுதம் இல்லாத அரச தந்திரம் வாத்தியக் குழு இல்லாத பாட்டுக் கச்சேரி போன்றது' என்று டென்மார்க் அறிஞர் கூறியிருக்கிருர். போர் நிறுத்த உடன்பாட்டை நிறைவேற்றிய எமது நாட்டுக்கு இந்த உவமை சிந்தனைக்குரியது.

நல்ல பாடகர்கள் பொன்னின் குடம்போன்றவர்கள். அவர்கள் கச்சேரி நடத்தும்போது வாத்தியக்குழுவினரின் வேலை அதற்கு பொட்டிடுவது போன்றது.

தோடி ராகத்தைப்பாடிக் கொண்டிருக்கும் சங்கீத விற்பன்னர் சிலவேளைகளில் பக்கவாத்தியங்களால் இடர்ப்படுவது நாம் கண்ட அனுபவம். ஆபரணம் அழகான பெண்ணின் குறைகளை மறைத்து நிறைவு காட்ட உதவலாம்; ஆனல் அழகு இயற்கையில் அமைந்த அரிய செல்வம்; இசையும் அத்தகையதே.

ஆயுத பலத்தால் பராக்கிரமத்தை வெளிப்படுத்திய வீரர் ஆயுதத்தை முற்ருக ஒழித்து அரச தந்திரத்தல் போராட முன்வரவேண்டுமென்பது வெறும் ஏமாற்றப் பேச்சல்ல. அகில உலகுமே இன்று காந்தியத் தத்துவத்தை நாடிநிற்கிறது.

இலங்கை ராணுவம் ஆயுதத்தைக் கீழே போடுவதோடு தமிழ்மக்கள் வாழும் இடங்களில் முகாமமைத்து இங்கு குந்திக்கொண்டு 'கூதற்காயும்' கடமையில் தொடராது விலக்கப்பட வேண்டும்.

இலங்கை-இந்திய உடன்பாட்டின்படி, போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும். போராட்டம் தொடரவேண்டுமானல் அது அரசியல் தந்திரமுறையில் என்பது வெளிடடை. சத்தியாக்கிரகம் என்ற ஆயுதம் இரத்தம் சிந்த இடமளிக்காதஆயுதம். உண்மை வீரன் கையில் அது வெற்றிகாண உதவும்.

இன்று பெரிதாகப் பேசப்படும் போராளிகளின் மோதல்கள், போலியோ நோயால் பாதிக்கப்பட்ட நோயாளியின் காலுக்கு உரிய சட்டாத்து உண்டாக்கும் இன்னல்கள். தாங்க இயலாதவை, ஆனல் ஈற்றில் நன்மை தருபவை.

இவற்றை தண்டிப்பதை விட தூண்டிவிடும் பணியை அரச பத்திரிகைகள் தொடங்கியிருக்கின்றன. மாற்ருந்தாய் அரசின் பத்திரிகைகள் இவை என்பதில் என்ன வியப்பு.

இரண்டாவது உலகயுத்தம் உருவாகும் காலத்தில் அன்றைய அமெரிக்க ஜனதிபதி ரூஸ்வெல்ட் சொன்ன வசனம் இன்று நினைவுக்கு வருகிறது. "மிகத் திறமை வாய்ந்த சேனைத்தலைவர்கள் சண்டையில் மட்டுமல்ல பத்திரிகைகளிலும் பணியாற்றுகிருர்கள்" என்ருர் ரூஸ்வெல்ட்.

பயங்கரவாதத்தை ஒழிக்கவே இன்றைய ஒப்பந்தம் உதவும் என்ற கருத்தை சிங்கள மக்கள் மத்தியில் பரப்பி அதற்கு ஆதரவு திரட்டுவது இன்று நடைபெறும் திரிபுவாதம்.

அதற்குப்பக்கவாத்தியமே பத்திரிகைகள் தூண்டிவிடும் போராளிகள் மோதல். இவ்வித மோதல் வலுவடையாது தடுப்பது மக்களின் பொறுப்பு; பிரஜைகள் குழுக்களின் பெரும் பொறுப்பு.

கட்டுப்பாட்டுக்கப்பால் ஆயுதபோராட்டம் தலையெடுப்பின் அதனைத் தடுத்து நிறுத்த இந்திய அமைதிப்படை செயற்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

பல தியாகங்களையும், தீரச்செயல்களையும்சாதித்த புலிகள் இயக்கம் அரசியல் போராட்டத்தில் ஈடுபடுவதை பொதுமக்கள் ஆதரிப்பர்.

ஆயுதப்போராட்டமென்பதற்கு இடமளித்தால்,போர் நிறுத்தம் என்ற பெரு வெற்றி பிசுபிசுத்துவிடும். பொதுமக்களுக்குண்டான விசுவாசம் இருந்த இடம் தெரியாமல் பறந்துவிடும்.

போர்க்களத்தல் வெற்றி கண்ட வீரர், இன்றைய சுமுகநிலைக்குப் பெரிதுப் உதவியதை இந்திய அரசோ, தமிழ் மக்களோ இலகுவில் மறந்துவிடலாகாது.

அத்தசமயம் இடைக்கால அரசில் விடுதலைப்புலிகள் பொறுப்பேற்க தக்க இடமளிப்பது தமிழக அரசியல் தலைவர்களின் அவசிய பொறுப்பு.

எவ்வகையிலும் இன்றைய ஒப்பந்தத்தை செல்லாக் காசாக்கும் வழியில் விடுதலைப் போராளிகளோ, அல்லது அரசவிரோத சக்திகளோ முற்படுவது தமிழ் மக்கள் எதிர்காலத்துக்கு பண்போடுவதாகும்.

இலங்கை அரசின் அரச தந்திரம் ஒப்பந்தத்தை தனக்குச் சார்பாக நடத்த முயலும் போது, அதைத் தடுத்துநிறுத்துவது இந்திய அரசின் தலையாய கடன் என்பதை நினைவூட்டுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(பண்டைதிவு)

அஞ்சல் தொலைத் தொடர்ப் சேவையாளர் சங்கத்தின் [illegible] வைத்திஸ்வரா வித்தியாலய பண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான அறிவித்தல்கள் இச்சங்கத்தின் யாழ். கிளைச் செயலாளரால் இதன் உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

---

உலக அரசியல் — அவதானி

# கலியுகத்தின் கடைசிக் கூறு இது?

**உலகின் பல பாகங்களில் நடைபெறும் போரும், நிலவும் பிணக்கும் ஓய்ந்தபாடில்லை! வல்லரசுகளின் ஆயுத வியாபாரம்உலகஅமைதிக்கு இன்றைய சாபக்கேடு!**

உலகை அழிக்க அவதரித்த ஹிட்லர் என்று சொல்லி, இரண்டாவது உலகயுத்தத்தில் அந்தப்பூதத்தை அடக்கம் செய்த நேசபடைகள் சமாதான உலகை நிறுவ எடுத்த முயற்சிகள் 'தோல்வி' என்றே கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு நான்கு நாடுகளில் ஒன்ருவது போரில் அகப்பட்டு, அழிவை அதிகரிக்கிறது. மூன்ருவது உலகயுத்தம் ஒன்று தோன்றவில்லை என்ற பெருமிதம் வெற்றுப் பேச்சு! இரண்டாவது உலக யுத்தத்தில் சுமார் 350 லட்சம் பேர் இறந்தனரென்று கூறப்படுகிறது. நாற்பத்திரண்டு வருடங்களுக்குப்பின் இன்று சுமார் நூறுபோர்கள் நடந்ததும், நடக்கிறதும் கணக்கில் எடுத்தால், 1954-ம் ஆண்டுக்குப்பின நூறுபோர்களில் அத்தொகைக்குமேலாக மக்கள் மடிந்திருக்கின்றனர் என்றெரு புள்ளிவிபரம்.

இக்காலகட்டத்தில் கம்பூச்சியாவில் நடந்த 'இனக்கொலை' ப் போரிலும் உள்நாட்டுப் போரிலும் சுமார் 10 அல்லது 15லட்சம்பேர் உயிரிழந்தனர். இதுவேமிக்க கோரமான போர். இன்றுநடைபெறும் ஈரான் - ஈராக் யுத்தம் - ஒரு எல்லைப்பிரச்னையில் ஆரம்பமான போர் - வளைகுடாவில் விரிவடைந்து எட்டாவது ஆண்டுக்கு எட்டியிருக்கிறது, சுமார் 5 லட்சம் மக்கள் இதுவரையில் கொல்லப்பட்டனர்.

காயப்பட்டவர்களையும் கணக்கில் கொண்டால் இந்த 37 வருட காலத்தில் தொளாயிரம் லட்சம் - 90 கோடி — மக்கள் பலியாகிஇருப்பதை காணலாம்.

## இக்கால யுத்தங்கள்

ஆபிரிக்காவில் - பலநாடுகள் — ஆசியாவில் சுமார் ஒரு டசின் - ஐரோப்பாவில், ஐரிஷ் கதகோலக்கரின் போர் ஒன்றே - லத்தின் அமெரிக்காவில் சுமார் ஏழு; மத்திய கிழக்கிலும், பாரசீககுடாவிலும் ஒன்பது - என்பதை நோக்கினல், ஐக்கிய அமெரிக்காவிலும் சோவியத் ரஷ்யாவிலும், சீனவிலும் - போர் எதுவும் கிடையாதென்பது புலப்படுகிறது.

மூன்றும் உலகிலேயே — வறிய, சுதந்திரம் பெற்ற, பெருத நாடுகளிலேயே இவ்விதபோர் நடைபெறுகிறது ஆனல் அதன் அடிப்படையில் இந்த மூன்று வல்லரசுகள் எங்காவது காணப்படும். வியட்னும், கொரிய யுத்தத்தில் சீன அகப்பட்டிருக்கிறது. ஏனைய போர்களில் பெரும்பாலும் அமெரிக்கா - சோவியத் போட்டி - போர்களுக்குத் தூபமிடும் சக்தியென்பது தெளிவு.

மூன்றும் உலகநாடுகளின் செல்வத்தை உறிஞ்சிவிட அவற்றிற்கு ஆயுதம் விற்பதால் வல்லரசுகள் செல்வம் தேடுகின்றன. தங்கள் போரில் நடைபெறும் போரில் தாங்கள் இறப்பதில்லை, தோல்வி கண்டாலும் ஆயுத விற்பனையால் நயமுண்டு.

உலக சமாதானத்தின் இன்றய வரலாறு இருந்தவாறென்னே.

## ஐ. நா. பொதுச்சபை

159 நாடுகளைக் கொண்ட ஐ. நா. தனது வருடாந்த பொதுக் கூட்டத்தை இவ்வாரம் கூட்டுகிறது. உலகில் போர், வறுமை, நோய், கல்வியின்மை போன்ற பலவிடயங்கள் ஆராயப்படும்.

போர், போர் நிறுத்தம் என்றல் அது வல்லரசுகள் — குறிப்பாக அதில் வல்லரசுகள் இரண்டின் சொல்லே செல்லும் நிலையில் இருப்பதால் போர்முடிவு, சமாதானம், அணுஆயுதக் கெடுபிடிப்போர் — இவை முடிவு காண்பதில்லை.

## சிறிய நாடுகள்

### இலங்கை

இன்று வரைக்கும் "நாட்டாண்மை' வல்லரசுகளுக்கே உண்டானலும், உலகளாவிய நிலையில் மிகச்சிறிய நாடுகள் ஆக்கபூர்வமான திட்டங்களை உருவாக்க முடிந்ததை நாம் மறந்துவிடுகிறேம்.

தனிமனிதனுக்கும், நாட்டுக்கும், ஏன் உலகிற்கும் தான் நிம்மதியாகவாழ வீடு ஒன்று அவசியம், வீடில்லா வாழ்வு, நோய்க்கு பாதுகாப்பின்மைக்கும் முக்கியகாரணம் என்று மொழிந்த இலங்கைப் பிரதமர் பிரேமதாச உலகில் இவ்வருடம் 'வீடமைப்பு வருடம்' என்ற சர்வதேச திட்டத்தின் தந்தையெனலாம். தமது சொந்த நாட்டில் — இலங்கையில். இத்திட்டம் வெற்றியடைய உழைப்பதோடு பல நாடுகளில் இது முன்னேற்றம் காண உதவியதால் இலங்கை உலக சமாதானத்துக்கு உழைக்க உதவியது

## நியுஸிலன்ட்

இச்சிறுநாடு மிகப்பெரிய சாதனையில் ஈடுபட்டிருக்கிறது அணுஆயுத ஒழிப்பில் இது முன்னிற்கின்றது. அமெரிக்காவையோ சோவியத் ரஷ்யாவையோ ஆதரிக்காது அணுஆயுதம் உலகில் எங்கும்காணப்படாது என்று அதன் பிரதமர் டேவிட்லாங்கே (Langa) அதற்கென [ஆயுத ஒழிப்பு] என்றெரு அமைச்சை நிறுவியிருக்கிருர். அமெரிக்காவின் நெற்றிக்கண்ணைக்கண்டு அஞ்சாதவர் இவர்.

## அமெரிக்க விவகாரம்

இவ்வாரம் வாஷிங்டனுக்கு வரும் சோவியத் வெளிவிவகார அமைச்சரை ஜனதிபதி றீகன் சந்தித்து, அமெரிக்க-சோவியத் ஆயுத உடன்பாடு பற்றி பேசுவாரென்றும் இரு தேசத்தின் தலைவர்களுக்கிடையே இவ்விடயம்பற்றி ஒற்றுமை காணும்வாய்ப்புண்டு என்றும் நம்பப்படுகிறது.

இடைத்தர ஏவுகணைகளை ஒழிக்கும் திட்டம் கைகூடுமானல் இருதலைவர்களின் மூன்ருவது உச்சிமாநாடு அக்டோபர்க்கிடையில் அல்லது நவம்பரில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## வளைகுடாவிடயம்

ஐ. நா. பொதுச் செயலாளரின் சமாதானத்தூது முடிவடைந்துவிட்டது. அவருடன் பேச்சுக்கள் நடத்திய ஈரான், ஈராக் தலைவர்கள், அதேநேரத்தில் மிகவேகமாக நடந்த போரின் உக்கிரத்தை தணிக்க முடியவில்லை.

இந்தச் சமாதானத் தீர்மானத்தை ஏற்காத நாட்டை பாதுகாப்புச்சபை அங்கத்துவ நாடுகள் பொருளாதார ரீதியில் பகிஷ்கரிக்கவேண்டுமென்று றீகன் வாதாடுகின்ருர்; அது சாத்தியமானதல்ல

---

# சீனக் கம்யூனிஸ்ட் சீர்திருத்தவாதம் மாற்றம் கொண்டு வருமா? அல்லது கட்சி செல்வாக்கு சமூகத்தின் சீரழிவா?

கலாசாரப் புரட்சியே நவசீன சரித்திரத்தில் ஒரு கறல்படிந்த அத்தியாயம் என்ற கருத்து மாசேதுங் மறைந்தபோது அதிவேகமாகப்பரவியது.

1966—76 இந்தப் பத்து வருடங்களில் சீனச் சமுதாய வாழ்வு மிக்க கடுமையான மாற்றம் கண்டது. பலபெரும் 'புள்ளிகள்' கானுக்குள் தூக்கி எறியப்பட்டார்கள், பாரம்பரிய செல்வாக்கு என்ற சந்தேகமிருந்தாலே போதும்; அதுபடுகுழிக்குத் தள்ளிவிடும். விசேட சலுகை, விசேட அந்தஸ்து என்ற வழிகளில் உயர்ச்சி பெற்றவர்கள் தரப்படுத்தப்பட்டார்கள். ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்து வாழ்க்கை நடத்தத்திண்டாடினல் அதுவே முன்னேற்றத்துக்குரிய படியாகவிருந்தது.

இந்தத்தலைகீழான தீவிரமான செயற்பாடுகளுக்கு தக்க விளக்கமளித்த புரட்சித் தலைவரின்வாக்கு, பொன்னென போற்றப்பட்டது. தீவிர நடவடிக்கைகள் அகில சீன தேச மட்டில், பலருக்குப் பலவிதமான இடர்களை ஏற்படுத்தின.

மாசேதுங் மறைவுக்குப்பின் சீன ஆட்சிமுறை பலவிதப்பட்ட மாற்றங்களுக்கு இடமளித்தது. இருப்பினும்பழைய சீனக் கம்யூனிஸ்ட்கட்சி, கம்யூனிஸ்ட் அடிப்படைக் கொள்கையிலிருந்து விலகி பலவிதமான ஊழல்களுக்கு இடமளிக்கும் நிலையை எட்டி இருக்கிறது.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்ற எதிர்ப்பு இயக்கம், குறிப்பாக இளைஞர் பல்கலைக் கழக மாணவர் சமூகத்தில் வேரூன்றிவிட்டது.

இன்று ஆட்சித் தலைவராகத் தொடரும் டெங்சியாவோபிங் ஆட்சி ஊழல்கள், சமூகக்குறைபாடுகள் அனைத்தையுங்களைந்து கம்யூனிஸ்ட் அடிப்படைக் கொள்கைக்கமைய, ஜனநாயக முறையில் அதிகாரத்துவம் வழங்க வழிகாணவேண்டுமென்று திட்டமிடுகிருர். அவருடைய நவீன மயமாக்கும் திட்டம் பல சர்ச்சைகள் எழுப்பிவருகிறது.

திறமை, தகைமை, ஆற்றல் உள்ளவர்கள் தமக்குரிய தொழில், பதவிபெறுவது, கம்யூனிஸ சமுதாய வாழ்வின் சிறப்பு என்று கொள்ளப்படுகிறது. ஆனல் இன்று சீனவில் இது முயற்கொம்பு என்ற குற்றம் பகிரங்கமாக சொல்லப்படுகிறது.

4கோடி 60 லட்சம் உறுப்பினரைக்கொண்ட சீனக் கம்யூனிஸ்ட்கட்சி, நவசீனவின் வளர்ச்சிக்கு உரிமைகொண்டாடிய காலம்போல், இன்று மக்கள் தங்கள் செல்வாக்கினல் உயர்ச்சிதேடும் வேட்டையில் ஆற்றல்பெறவேண்டிய நிர்ப்பந்தம் உருவானதற்கு கட்சியின் சீர்கேடு காரணமென்று கொள்ளப்படுகிறது.

அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் ஆட்சிக்காங்கிரஸ் தேர்தலில் அடிப்படை மாற்றங்களுக்கு இடம் உண்டா? சந்தேகம்.

# வீதிதிருத்தம்: நிதி ஒதுக்கீடு விபரம்

[மாவிட்டபுரம்]

யாழ் அபிவிருத்திச் சபை காங்கேசன்துறை உப அலுவலக எல்லைக்குள் வீதிதிருத்தம் உட்பட மற்றும் சில அபிவிருத்தி வேலைகளுக்காக ஒரு லட்சத்து 94 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பன்முக வரவுசெலவுத்திட்ட நிதியில் மேற்படி அபிவிருத்தி வேலைகளுக்கு நிதிஒதுக்கப்பட்டபோதும் அண்மைக்கால இராணுவ நடவடிக்கையால் இவ்வேலைகள் தாமதமடைந்திருந்தன.

தற்போது இவ்வேலைகளைச் செய்ய காங்கேசன்துறை உப அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. மேற்கொள்ளப்படவுள்ள வேலைகளும் நிதிஒதுக்கீடும் வருமாறு:

மாங்கொல்லைவீதி திருத்தம் 28 ஆயிரம் ரூபா. தம்பகதம்பி வீதி திருத்தம் 40 ஆயிரம் ரூபா. ஊறணி வீதிதிருத்தம் 30 ஆயிரம் ரூபா. மயிலிட்டி சிவன் வீதி திருத்தம் 16 ஆயிரம் ரூபா. மயிலிட்டி 5ம் வட்டாரம் வெள்ளவாய்க்கால் திருத்தம் 20 ஆயிரம் ரூபா. மயிலிட்டி 6ம் வட்டார குடியேற்றத்திட்டத்தில் வெள்ளவாய்க்கால் அமைத்தல் 60 ஆயிரம் ரூபா.

## பாக். அமைச்சர் சந்திப்பார்

இஸ்லாமாபாத் செப் 15

பாகிஸ்தானிய வெளிவிவகார அமைச்சர் ஐகூப் கான் இம்மாத இறுதியில் சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவர்னட்ஸேயை நியூயோர்க்கில் சந்திக்கவுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் துருப்புகளை வாபஸ் பெறுவது உட்பட பல விடயங்களை இவர்களிருவரும் ஆராயவுள்ளனர். (ஊ)

## அரைப்போத்தல் மது அருந்திய 5 வயது சிறுவன் மரணம்

[கொழும்பு]

அரைப்போத்தல் சாராயம் அருந்திய ஐந்துவயதுச் சிறுவன் ஆபத்தான நிலையில் பொலநறுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

மஹிந்த கித்சிறி அபயரத்ன என்ற சிறுவனே பலியானவராகும். இவரது சிறிய தகப்பனார் வீட்டில் கொண்டுவந்து வைத்த சாராயப் போத்தலை எடுத்து அரைப்போத்தல் சாராயத்தை சிறுவன் குடித்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவன் தனது சிறியதந்தையுடன் தொடர்பான காலம் முதல் மது அருந்தும் பழக்கம் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இச்சிறுவனின் 7 வயதுச் சகோதரனுக்குச் குடிப்பழக்கம் உண்டென்றும் இதற்கு சிறிய தந்தையே காரணம் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. [க]

## ஆண்டு விழா

(மாவிட்டபுரம்)

இணுவில் கலை ஒளி மன்றம் 22-வது ஆண்டு நிறைவையொட்டி 20 ஓவர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றை நடாத்த இருக்கிறது.

40 கிலோ நிறைக்கு உட்பட்டோர் ஒருபிரிவாகவும், அதற்கு மேற்பட்டோர் ஒரு பிரிவாகவும் இச்சுற்றுப்போட்டி இடம் பெறஉள்ளது.


# ஏன்

## ஸ்ரான்டேர்ட் பினன்ஸில் முதலீடுசெய்ய வேண்டும்?



'தொடர்ச்சியான சிறந்த வட்டி வீதங்கள்'



'கால் நூற்றாண்டுக்கும் மேலாக அவர்களால் நிரூபிக்கப்பட்ட நம்பிக்கையான சேவை'



'வைப்பு ஆதாரத்தில் 40%க்கும் மேற்பட்ட தொகைக்கு நிறைகாப்பு.'



'குறைந்தபட்ச வைப்புத் தொகை ரூ.1000/- மட்டுமே அத்துடன் மிகச் சிறிய முதலீட்டாளர்களுக்கும் மிகக் கண்ணியமான சேவை'



'எனது முதலீடுகளுக்குப் பாதுகாப்பும் எனக்கு உறுதியான வருமானமும்'

1987ம் ஆண்டுக்கான வட்டி வீதம்

| வைப்புக்கள் | 3 ஆண்டுகள் | | 2 ஆண்டுகள் | | 1 ஆண்டு | | 6 மாதங்கள் | 3 மாதங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | முதிர்ச்சியில் | மாதாந்தம் | முதிர்ச்சியில் | மாதாந்தம் | முதிர்ச்சியில் | மாதாந்தம் | முதிர்ச்சியில் | முதிர்ச்சியில் |
| ரூ.200,000 உம் அதற்கு மேலும் | 25% | 19% | 23% | 19% | 17% | 15% | 15% | 14% |
| ரூ.100,000 உம் ரூ.200,000க்கு குறையவும் | 23% | 19% | 20% | 17% | 17% | 15% | 15% | 14% |
| ரூ.1,000 உம் அதற்கு மேலும் | 22% | 18% | 19% | 16% | 17% | 15% | 15% | 14% |

நிதி நிலைமைத் தகவல்கள்

| | 1985/86 ரூபா | 1984/85 ரூபா | 1983/84 ரூபா |
|---|---|---|---|
| மூலதனம் | 1,700,000 | 1,700,000 | 1,700,000 |
| மூலதன ஒதுக்கீடு | 14,926,300 | 9,944,500 | 9,944,500 |
| வருமான ஒதுக்கீடு | 4,326,547 | 1,452,653 | 1,200,764 |
| மூலதனமும் ஒதுக்கீடும் | 20,952,847 | 13,097,153 | 12,845,264 |
| சேமிப்புகள் | 139,700,253 | 123,346,021 | 90,507,406 |
| கடன்கள் | 471,077 | 1,484,621 | 3,211,633 |
| சேமிப்பாளர்களுக்கு வட்டி வழங்கு முன் கிடைத்த லாபம் | 28,940,000 | 24,658,633 | 23,101,7[illegible]3 |
| சேமிப்பாளர்களுக்கு வழங்கிய வட்டி | 26,066,107 | 23,306,744 | 20,060,740 |
| வரிவிதிக்குமுன் கிடைத்த நிகர லாபம் | 2,873,894 | 1,351,888 | 3,041,023 |
| வரிவிதித்தபின் கிடைத்த நிகரலாபம் | 2,873,894 | 1,351,888 | 3,041,023 |
| ஆதாய பங்குவீதம் | — | 1,100,000 | 2,295,000 |
| | — | 65% | 135% |

இயக்குநர்கள்
எச் எஸ்.ஈ குரே– தலைவர்
மா சட்டத்தரணி (இன்னர் டெம்பல்) சட்டத்தரணி
F B I. M. (Eng) A C I (Lond.)
எம் வி தியாகராஜா, உப தலைவர்
F C M A F C I A A F B I M
பி குணசேகரம. செயலாட்சி இயக்குநர்
ஜே சி. ஆர் குரே
F C M. A M B I M
விரசன என குணவர்தன
J P U M A C I (Lond) A I Arb (Lond)
சட்டத்தரணி ... ஆலோசகர் நொத்தாரிசு

பிரதான தொழில்கள்
நவீன கொள்வனவுக்கு நிதியளித்தல் குத்தகை மற்றும் கடன் நிதியளித்தல் வைப்புகளைச் சேகரித்தல் அடைமானக் கடன் இறக்குமதிக்கு நிதியளித்தல்

## இன்றே நீங்களும் ஸ்ரான்டேர்ட் பினன்ஸில் முதலீடுசெய்ய வேண்டாமா?

Minds/SF/30

நம்பிக்கையோடு முதலீடு செய்யுங்கள்

SFL ESTD 1959

## ஸ்ரான்டேர்ட் பினன்ஸ் லிமிட்டெட்

த. பெ. இல. 1644, 481, டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு-10 தொலை பேசி: 597111, 598411

1959 டிசம்பர் 31ல் கூட்டிணைக்கப்பட்டது.

1979ம் ஆண்டின் 27ம் இலக்க நிதிக் கம்பனிகள் கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்திற்கு அமையப் பதிவு செய்யப்பட்டது. அடைமான அதிகாரச்சட்டம், நம்பிக்கைப் பற்றுச்சீட்டுகள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றிற்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவர் நிலையம்.

# சைவ சமயப்பாடப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

கொழும்பு விவேகானந்த சபையினரால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு அகில இலங்கைச் சைவ சமயப்பாடப் பரீட்சை இவ்வாண்டு வழமை போல் நாடளாவிய ரீதியில் நவம்பர் மாதம் 15ம் திகதி நடாத்தப்படவுள்ளது,

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலைகள் "பரீட்சை உதவிச் செயலாளர், 34, விவேகானந்த மேடு, கொழும்பு- 13'' என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு பரீட்சை விதிகள் அடங்கிய பாடத்திட்டத்தையும் தமக்கு தேவையான விண்ணப்பப் படிவங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

## ஒத்திவைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக் கல்வி ஆசிரியர்களுக்கு யா/ வெலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் 16, 17, ம் திகதிகளில் நடைபெறவிருந்த 'தொடர் மதிப்பீடு'' பற்றிய சேவைக்கான கல்வி வகுப்புக்கள் எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளுக்குப் பின்போடப்பட்டுள்ளதாக தொழில் நுட்பக்கல்வி அதிகாரி ச. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

## முகாம் மூடப்பட்டது

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை கல்லூரி வீதியில் அமைந்திருந்த இந்திய அமைதிப்படை முகாம் நேற்று முன்தினத்துடன் மூடப்பட்டது.

இங்கிருந்த இராணுவத்தினரும், இராணுவ தளபாடங்களும் வர்த்தலைவிளானில் புதிய முகாம் ஒன்றை அமைப்பதற்காக எடுத்துச்செல்லப்பட்டன

அண்மையில் அமைதிப்படை முகாம்கள் முன் நடத்தப்பட்ட மறியல் போராட்டத்தின் போது இம்முகாமை மூடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# வெலிஓயா இராணுவ நிர்வாக மாவட்டம்?

[அலுவலக நிருபர்]

வவனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, அனுராதபுரம் ஆகிய நான்கு மாவட்டங்களையும் உள்ளடக்கி வெலிஓயா இராணுவ நிர்வாக மாவட்டம் என்ற தனிமாவட்டம் ஒன்று கடந்த வருடம் முதல் இயங்கிவருகின்றது.

நாயாறு, கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, தென்னமாவாடி, புல்மோட்டை, சேருவில், பதவியா, பராக்கிரமபுர, சிறீபுர, பட்டிக்குடியிருப்பு, நெடுங்கேணி, ஒதியமலை, ஆண்டாங்குளம், தனிக்கல்லு, டொலர் பாம். ஹென்பாம், சிலோன் தியேட்டஸ் பாம், முந்திரிக்கை குளம் ஆகிய பகுதிகள் இந்த வெலிஓயா இராணுவ நிர்வாக மாவட்டத்தில் அடங்குகின்றன.

டொலர்பாம், ஹென்பாம், முந்திரிகைக்குளம், சிலோன் தியேட்டர்ஸ்பாம் ஆகிய பகுதிகளிலுள்ள தமிழருக்குச் சொந்தமான நிலங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

மேலும் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் நாலாயிரம்சிங்கள குடும்பங்களைச் சேர்ந்த இருபதினாயிரம் மக்களை குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவாம்.

இங்கு குடியேறும் சிங்கள மக்களுக்கு உதவியாகசிலோன் தியேட்டர்ஸ் பாமில் அமைந்துள்ள இராணுவ பயிற்சி முகாம் செயற்பட்டுக் கொண்டேயிருக்கும், என்றும் அறியப்படுகின்றது.

இந்த குடியேற்றப் பகுதியில் ஆஸ்பததிரி, தபால் நிலையம், கூட்டுறவுச் சங்கம், பாடசாலை, வங்கி போன்றவற்றை உள்ளடக்கி அமைக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட குடியேற்றப் பகுதியில் சிங்களமக்கள் குடியிருப்பதற்கான சகல வசதிகளையும் வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் சர்வோதயம் செய்யவுள்ளதாக அறியப்படுகின்றது.

வெலிஓயாவிலுள்ள ராணுவ முகாம் இப்பொழுது அபிவிருத்திப்பணிமனை போல் காட்சியளிக்கிறது. இங்குதான்இந்த நிர்வாக மாவட்ட அபிவிருத்தி வேலைகள் பற்றி தீர்மானிக்கப்படுகின்றனவாம்

வவனியா, முல்லைத்தீவு, மாவட்ட அரச அதிபர்களால் தமிழர்களுக்கு வழங்கப்பட்ட சில காணிகள் 'எல். டி. ஓ' காணி போமிற், அனுவல் பேமிற்' உணவு உற்பத்தி பேமிற் வழங்கப்பட்டிருந்தன.

இவை 1984-ம் 1986-ம் ஆண்டுகளில் வர்த்தமானி மூலம் நிராகரிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்றது தெரிந்ததே. (ஓ)

## அமைதிப்படை உயரதிகாரிக்கு புகார்

[அச்சுவேலி]

அச்சுவேலி, பத்தமேனி, இடைக்காடு பிரஜைகள் குழு கூட்டாக பலாலி அமைதிப்படை முகாம் உயரதிகாரியை சந்தித்து தமது பகுதியில் நிலவும் பிரச்னைகள் பற்றி உரையாடியது.

பலாலியிலுள்ள இந்திய அமைதிப்படை முகாம் உயர் அதிகாரி மேஜர் கெல்ஹர்ரை சந்தித்து உரையாடிய பிரஜைகள் குழு நிர்வாகிகள், தொண்டமனாறு சிவன் கோயில் அடைப்பு மக்களின் பிரச்னை பற்றி எடுத்துக்கூறினர்.

1984ம் ஆண்டு தொடக்கம் சொந்த வீடுகளைவிட்டு அகதிகளாக அலையும் சிவன்கோயில் அடைப்பு மக்களின் குடியிருப்பு வீடுகளைவிட்டு ஸ்ரீலங்கா ராணுவம் வெளியேறவில்லை என்பது இந்திய அமைதிப்படை அதிகாரியின் கவனத்திற்குக்கொண்டுவரப்பட்டது. பத்தமேனி, இடைக்காடு பிரஜைகள் குழுத்தலைவர் எஸ் இராசேந்திரன் தலைமையில் சென்ற தூதுக்குழுவில் எம். யோசேப்பு, கே ஆறுமுகசாமி உட்பட பலர் கலந்துகொண்டனர்.


# றொபியலக்

## உயர்ந்த தரத்தின் மறுபெயர் !




றொபியலக் என்றதுமே உங்கள் நினைவுக்கு வருவது
நிலைத்து நிற்கும் இயல்பும் உயர்ந்த தரமுமே.
றொபியலக் இயற்கை அழிவுகளுக்கும் பங்கசுத் தாக்கத்திற்கும் ஈடு கொடுக்கும் அறபுதமான பெயின்ற். இது கழுவித்தூய்மை செய்ய மிகவும் எளிதானது............
மற்றைய பெயின்றை நாட வேண்டியதில்லை.

றொபியலக் - உங்களை ஒரு போதும் ஏமாற்றுது




மேலதிக விபரங்களுக்கு:-
லங்கெம் சிலோன் லிமிட்டெட்
760, பேஸ் லைன் வீதி,
கொழும்பு -9 .
தொலைபேசி: 598292 - 6.

LANKEM

றொபியலக் - லங்கெம் வழங்கும் ஒரு தரமான பெயின்ற.

MINDS/LR/

## யாழ்ப்பாணத்தில் விநியோகஸ்தர்கள்:-

(1) V. வடிவேல்,
219, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(2) புஸ்பா அன் கோ.,
128, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்:

(3) நந்தி இன்டஸ்றீஸ் அன் ஏஜன்ஸீஸ் லிமிட்டெட்,
176, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

பிரிவு II

# DAY CLASS

(திங்கள் — வெள்ளி 8-30 — 12-30)

**ஆரம்பம்: 18-09-87 காலை 8-30மணி**

(எமது வழமையான ஆசிரியர் குழுவினுல்)

| | | |
|---|---|---|
| 8-30 - Chemistry | — | சேதன இரசாயனம் |
| 9-30 - Physics | — | புலங்கள் |
| 10-30 - Botany | — | தாழ்வகைத் தாவரங்கள் |
| 11-30 - Zoology | — | இழையவியல் |
| 10-30 - Applied Maths | — | காவிகள் |
| 11-30 - Pure Maths | — | இருபடிச் சமன்பாடுகள் |

குறிப்பு: பிரிவு I இற்கான அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது.

விபரங்கட்கு :

## New Master Institute

B. M. C. LANE, — JAFFNA.

[எ 2257]

உ

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி கனகரட்ணம் ஜீவிதா**

அளவெட்டியைச் சேர்ந்த கனகரட்ணம்- அருட்செல்வி தம்பதிகளின் செல்வப்புதல்வி ஜீவிதா இன்று (16-09-1987) தனது முதலாவது பிறந்த நாளை தனது வீட்டில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிருர். இவரை அன்புப் பெற்ருேர் அம்மம்மா, அம்மப்பா (சவுதி), பூட்டம்மா, அப்பம்மா, அப்பப்பா, சித்திமார். பெரியப்பாமார், பெரியம்மாமார்,மாமாமார்,அத்தைமார், விஜி அண்ணு, திலீ அத்தான், ரம்யா மச்சாள், தாருணி மச்சாள், உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிருர்கள்.

(சி 1114)

## WANTED

Wanted for an audit firm in Jaffna an Accounts Assistant and an Audit Assitant with good knowledge in book-keeping and accountancy.

Apply Advt. No. C 1171, C/o Eelanadu, Jaffna.

(C 1171)

## Wanted

The Y.W.C.A. Jaffna requires for immediate engagement a lady with experience in and knowledge of Scientific Dress Making.

Applications should reach the President, Y. W. C. A., Vocational Centre, 99, Chapel Street, Jaffna before September 26th.

No Personal Callers.

PRESIDENT,
Y. W. C. A.

(C 1172)

## பதவி வெற்றிடங்கள்

1. **சந்தைப்படுத்தும் பெண்கள்:**
   பொருள்களை வானில் கொண்டுசென்று நுகர்வோரிடம் நேரடியாக விற்பனை செய்வதற்கு G.C.E. சாதாரண தரம் படித்த பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன நேர்முகப்பரீட்சை 19-09-87 அன்று நடைபெறும் அனுபவம் உள்ளவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும.
2. **விற்பனைப் பிரதிநிதிகள் (பெண்கள்)**
   எமது பொருள்களை சந்தைப்படுத்துவதற்கு ஒவ்வொரு நகரத்திலும் உள்ள வியாபார நிலையங்களில் ஓடர்கள் சேகரிப்பதற்கு, G C E. உயர்தர வர்த்தகம் படித்த பெண்களிடம் இருநது விண்ணப்பங்கள் சேகரிக்கப்படுகின்றன. விற்பனை அடிப்படையில் மாதாந்தம் 1500/- சம்பளமும் பிற சலுகைகளும் வழங்கப்படும்.

உங்கள் தரமான உள்ளூர் உற்பத்திப் பொருள்களை சந்தைப் படுத்துவதற்கு எமதுஸ்தாபனத்தைநாடுங்கள்

**கிறிஸ்ரி வர்த்தக நிலையம்**

95, பருத்தித்துறை விதி, யாழ்ப்பாணம்-

(எ 2258)

## ச(f)வாரி



**ச(f)வாரி கோப்பி பிரியர்களுக்கு ஓர் நற்செய்தி**

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு ச(f)வாரி கோப்பி பைக்கட்டினுள்ளேயும் வண்ண ஸ்டிக்கர் (Sticker) இலவசம்.

மற்றும் நீங்கள் வாங்கும் ச(f)வாரி கோப்பி வெற்று பக்கட்டுகளை சேகரித்து

அரிய பெரிய பரிசுகளை வெல்லுங்கள்:

இன்றே உங்கள் அருகிலுள்ள வியாபாரிகளிடம்

**ச(f)வாரி கோப்பி**

என்று கேட்டு வாங்குங்கள்.

[எ 1191]

## சிலோன் பிரின்டேர்ஸ் குறூப் (Ceylon Printers Group)

நிறுவனத்தில் ஓர் அங்கமாக விளங்கும்

**ஓவிஸ் இகுயிப்மென்ற் லிமிடெட்**
**Office Equipment Limited**

★ 70 வருடங்களுக்கு மேலாக உலகப்பிரசித்தி பெற்று விளங்கும் Olivetti - Rex Rotary அலுவலக உபகரணங்களுக்கு ஏகவிநியோகத்தர்கள்.

OLIVETTI—REX ROTARY—HALDA—SIMPLEX

**அலுவலக உபகரணங்கள்**

Olivetti Manual Typewriters Rs. 2750/- மேலாக
Olivetti Electronic Typewriters
Olivetti Electronic Calculators
Rex Rotary Duplicator
Rex Rotary Photo Copying Machine
Simplex Time Recorder
கல்டா (Halda) தமிழ் தட்டச்சு யந்திரம்

★ விற்பனையாகும் பொருள்களுக்கு நம்பிக்கையும் தரமும் மிகுந்த பராமரிப்பு சேவை எம்மால் வழங்கப்படும்.
(Reliable after Sales Service)

★ உயர்ந்த தரம் மிகுந்த றேனியோ வேலைகள்

★ போட்டோ கொப்பி சேவை
(Photo Copying Service)

மேற்குறிப்பிட்ட தேவைகட்கு எமது காட்சிச்சாலைக்கு இன்றேவிஜயம்செய்து பார்வையிடலாம்.

**ஓவிஸ் இகுயுப்மென்ற் லிமிட்டெட்**

கிளை அலுவலகம் :

45, பிரப்பங்குளம் வீதி,
(off K. K. S. Road)
யாழ்ப்பாணம்.

[எ 2250] (மனோகரா சந்தியிலிருந்து 150யார்]

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

உரும்பிராய் காலஞ்சென்ற தம்பையா இராசையா என்பவரது மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுககு நிர்வாகத் தத்துவப் பத்திரம் வழங்கும் விடயமாக

-மரணமெய்தியவர்.

வழ. இல:
தத்துவம் / 4027

தம்பையா இராசையா கைம்பெண் அன்னபூரணம், கோப்பாய் ரோட், உரும்பிராய்.

-மனுதார்.

மேலே இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லாத மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க பின்னுறதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1987ம் ஆண்டு ஐப்பசி மாதம் 2ந் திகதி காலை 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ருன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றது.

1987ம் ஆண்டு சித்திரை மாதம் 20ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
**க. நாகேந்திரன்,**
பதிவாளருக்காக.

**செ. மகேசன்,**
மனுதாரின் சட்டத்தரணி.

(சி 1178)

**இலங்கைச் சுங்க அலுவலகம், யாழ். மாவட்டம்.**

## புடவை விற்பனை

விற்பனைக்கான கீழ்வரும் பொருட்பட்டியலில் விபரிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவகைப் பொருள்களுக்கான கூறு (ஒன்று)இன் விலைக்கேள்விகள் அரக்கு முத்திரையிடப்பட்ட உறைகளில் இடப்பட்டிருப்பின் என்ருல் 21-9-87ல் திங்கட்கிழமை காலை 10-00மணிவரை யாழ். மாவட்ட சுங்கஅலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். இங்ஙனம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகள் 23-9-87 புதன்காலை 11மணிக்கு வருகைதந்துள்ள கேள்வினர் முன்னிலையில் கேள்விகள் உள்ளடக்கிய அரக்குமுத்திரையிடப்பட்ட உறைகள் பிரித்துப் பரிசீலிக்கப்படும். வருகைதரமுடியாத கேள்வினர் எழுத்துமூலம் தமது பிரதிநிதிகளை நியமிப்பின் எனது அனுமதியுடன் அவர்கள் அலுவலகத்தில் சமுகமளிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படும். அதிஉயர்ந்த விலைக்கான கேள்வி ஏற்றுக்கொள்ளுமிடத்து கேள்விக்குரியவர் முழுப் பொருட்களுக்கான மொத்த விலைத்தொகையை வங்கி உத்தர வாதவோலை (Bank Draft) மூலம் மூன்று நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும். இதன்பின் தீர்மானிக்கப்பட்ட திகதியில் விற்பனைக்கான பொருள்கள் யாவும் கடற்படைக் களஞ்சியத்திலிருந்தோ அல்லது காங்கேசன்துறை இறங்குதுறையிலிருந்தோ விநியோகிக்கப்படும். மேற்கூறிய நிபந்தனைகள் தவிர்ந்த மற்றைய நிபந்தனைகளுக்கு இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு வர்த்தமானி இல. 291 (1984-3-30)இல் பிரதான சுங்கசேகரிப்பாளரினுல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கு கவனம் கோரப்படுகின்றது.

| பொருள் விபரம் | தொகை |
|---|---|
| 1. கிப்ஸ் (KIBS) வகை இந்திய பலநிறச் சாரங்கள் | 600 |
| 2. பூவாளி (WATER CAN) இந்திய பலநிறச் சாரங்கள் | 2450 |

குறிப்பு: இவைபற்றிய மேலதிக விபரங்களை யாழ். மாவட்ட சுங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

ஒப்பம்
**த. கணநாதலிங்கம்,**
யாழ். மாவட்ட உப-சுங்க சேகரிப்பாளர்,
யாழ். மாவட்ட சுங்க சேகரிப்பாளருக்காக,

சுங்க அலுவலகம்,
601/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(எ-2260)

# இப்படியும் நடக்கிறது

நேற்றுப் பகல், யாழ்ப்பாணம் கலைப்புலவர் வீதியைச் சேர்ந்த எஸ். சந்திரபோஸ் எனும் வாசகர் நேரில் வந்தார்.

பூஸா முகாம், கைத்தொழில் பேட்டை மயமாகிறது பற்றி புதுக் கருத்தொன்றைக் கூறிச்சென்றார். அவர் எண்ணம் இதுதான்:

"'இப்படியும் நடக்கிறது' பகுதியில் பூஸா முகாமை கைத்தொழில் பேட்டையாக்கும் யோசனை கூறிய அந்தத் தங்கமூளைக்கு நோபல் பரிசு கொடுத்தாலும் தகும் என்று ஸ்ரீமான் பொதுசனம் பொடி வைத்ததாக எழுதியிருந்தீர்கள். அதில் சிறு திருத்தம். பூஸாவில் கைத்தொழில் பேட்டைக்குப் பதிலாக விவசாயப் பேட்டை நிறுவினால் மட்டுமே அந்த மனித உரம், விவசாய விளைவுகளின் அறுவடைக்கு வளம் சேர்க்கும்."

குறிப்பு: சம்பந்தப்பட்ட 'தங்கமூளை'க்குச் சமர்ப்பணம்.

—ஊடுருவி

---

THE EXPRESS INSTITUTE, KOPAY

## A/L 88-89

பொருளியல்

திரு. கிருஷ்ணானந்தன்

[எ-2253]

---

## புதிதாக ஆரம்பமான பயிற்சி நெறிகள்

Diploma in Nursing
(தாதிப்பயிற்சியில் டிப்ளோமா)

and

Diploma in Pharmacy
(பாமஸி பயிற்சியில் டிப்ளோமா)

புதிய பயிற்சி நெறிக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகி உள்ளன

உங்கள் பதிவுக்கு:

## North Ceylon Technical Institute

14, St, Peters Lane, Jaffna.

எ-2240

---

இலங்கையின் முன்னணித் தினசரியான "ஈழநாடு" விற்பனை செய்வதற்கு பின்வரும் இடங்களில் விற்பனையாளர்கள் தேவை.

முற்பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

- ★ ஒட்டுசுட்டான்
- ★ கற்சிலைமடு
- ★ செட்டிகுளம்
- ★ உடையார்கட்டு
- ★ நயினாதீவு
- ★ முருகண்டி
- ★ மாகோ
- ★ மட்டக்களப்பு
- ★ செங்கலடி
- ★ முளங்காவில்
- ★ மட்டுவில்நாடு
- ★ தலைமன்னார்
- ★ இயக்கச்சி
- ★ அனலைதீவு
- ★ கண்டி
- ★ அனுராதபுரம்
- ★ கல்முனை
- ★ வாழைச்சேனை

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:

நிர்வாகி,
ஈழநாடு,
த. பெ. எண். 49,
யாழ்ப்பாணம்.

எ-2243

---

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



செல்வன் கிளிற்றஸ் பிறேமதாஸ்

மண்ணுலகில்: 30-03-1964

விண்ணுலகில்: 16-09-1985

அன்பின் குல விளக்கே, பண்பின் உறைவிடமே, அழகின் சிகரமே, பார் புகழும் மகனே. நீ விண்ணுலகம் அடைந்து இன்று இரண்டாண்டு நிறைவு. மகனே உன்நினைவோ எங்கள் நெஞ்சை விட்டகலாது. உன் ஆத்மா சாந்தியடைய இறையருள் இறைஞ்சுகிறோம், உன் பிரிவால் வாடும்:

பெற்றோர், சகோதரர்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

நிலாவெளி,
திருகோணமலை.

[ஏ 2261]

---

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



கதிரவேலு பரணீதரன் (பரணி)

மலர்வு: 9-3-1973
உதிர்வு: 29-8-1986
திதி: 16-9-1987

பட்டங்கள் பல பெற்று இப்பார்தனில் ஓர் பல்கலை மன்னனாக விளங்குவீர் என்றிருக்கையில், பரணீதரா! எம்மை நட்டாற்றில் கைவிட்டு நல்லுலகம் ஏகினீரோ?

உமது ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்:
அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, அண்ணா, அக்கா, தங்கை.

(சி 1177)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி கதிரவேலு செல்லம்மா
(சுழிபுரம் தெற்கு)

தோற்றம்: 2-3-1930
மறைவு: 28-8-1986
திதி: 16-9-87

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கண்ணனை வேண்டி நிற்கும்:
அன்புக்கணவன், மகன்மார், மகள்மார், மருமகன்மார், மருமகள்மார், பேரப்பிள்ளைகள், தம்பிமார், மச்சாள்மார், தங்கை, மச்சான், மாமிமார், சுற்றத்தார்.
சுழிபுரம் தெற்கு.

(சி 1192)

---

ST. HENRY'S COLLEGE

## Old Boys Association

ILAVALAI

The Annual General Meeting of the above will be held at the College Hall on Sunday 18th, October 1987 at 9-30 a. m followed by Lunch at 1-00 p. m. All Old boys are kindly requested to get in touch with the Secretary for enrolment and Lunch reservations.

S. KANDIAH.
Honorary Secretary.

"Harriet Villa",
Sandilipay.

(C 1179)

---

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

---

# மலிவு விலையில்

## வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி

நாட்டின் நிலைமை சீரடைந்துள்ளதினால் கீழ்வரும் பொருள்கள் விலையினால் குறைக்கப்பட்டு விற்பனையாகின்றன.

யானை மார்க் குளிர்பானங்கள்

| | மொத்த விலை | சில்லறை விலை |
|---|---|---|
| 1 போத்தல் இனிப்பு சோடா | 3.13 | 3.35 |
| 1 " பிளேன் சோடா | 2.20 | 2.35 |
| 1 " பேயாவ சோடா | 3.15 | 3.35 |

## L. P. GAS கா(G)ஸ்

விநியோகமும் செய்யப்படும்.

தினசரி பஸ் சேவை
யாழ். நகரிலிருந்து திருகோணமலைக்கு
காலை 5-00 மணிக்கு புறப்படும் என்பதை
மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

## பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,

31, மானிப்பாய் வீதி, யாழ்.நகர்.

[ஏ-2259]

## அரசுசார்பற்ற

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மா நாட்டில் பிரதி திட்ட மிடல் பணிப்பாளர் திரு. சு. சிவதாசன், பொது சன தொடர்பு அதிகாரி திரு. குல சேகரம், விவசாய உப அதிபர் திரு கிருஷ்ணபிள்ளை, அகதி கள் புனர்வாழ்வுக் கழகத் தலை வர் பேராசிரியர் க. சிவத் தம்பி, யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு ஆர். பால சுப்பிரமணியம், மற்றும் பொது ஸ்தாபனப் பிரதிநிதி கள் பங்குபற் றினுர்கள்.

### சிவத்தம்பி கோரிக்கை

பேராசிரியர் க சிவத்தம்பி பேசுகையில் கூறியதாவது:-

"நோர்விஜியன் உதவி தரப் படும்போது சில தடங்கல் இருக்கிறது. உதவிகள் நிவா ரணத்திற்கும் அபிவிருத்திக் கும் தனித்தனியாகத் தரப்படு கிறது எங்கள் பகுதி அபி விருத்தியும் நிவாரணமும் ஒன்றுதான்.

"கடந்த காலத்தில் நோர்வி ஜியன் அரசு கூடுதலான உதவி களை வழங்கியுள்ளது. அங் குள்ள மீன்பிடி ஆய்வுக்கான பல்கலைக்கழகம், வடக்கு, கிழக் குக்குத் தேவையான உதவி களைச் செய்ய முன்வரவேண் இதேபோல் அங்குள்ள விவசா யத்துறை தொடர்பான பல் கலைச் கழகம் இங்கு விவசாயத் திற்கான உதவிகளைச் செய்ய வேண்டும்.

"தரப்படுகின்ற உதவி வரப் போகிற அரசியல் யதார்த்தத் திற்கு நன்கு இணைவதாக இருக்கவேண்டும். மாவட்ட ரீதியாக உதவிகளைப் பிரித்து வழங்கக் கூடாது" என்ருர்.

உதவிகள் ஒப்பந்தத்திற்கு அமைவாக அந்தக் கட்டுக் கோப்புக்குள்ளேயே இருக்கு மென்றும், ஒப்பந்தத்திற்கு எதி ராக இருக்காதென்றும் நோர் விஜியன் ஆலோசசர் தெரிவித் தார்.

பிரஜைகள் குழு இணைப்புக் குழுச் செயலாளர் திரு. சிவா னந்தராசா கூறியதாவது:–

"கிழச்கில் திருமலை, மட்டக் களப்பு முல்லைத்தீவு, மன்னுர், வவனியா, பின் யாழ்ப்பாணத் தில் வடமராட்சி தாக்குதலுக் குள்ளானது. முதலில் கிழக்கு மாகாணத்திற்கும் பின்னர் யாழ்ப்பாணத்திற்கும் உதவி வழங்கப்படவேண்டும்.

வெளிநாடுகள், புனர்வாழ்வு அமைச்சுக்கு வழங்கும் உதவி கள் கிழக்கு மாகாணத்தில் சிங் களக் குடியேற்றத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, நிதி கொடுப்பவரும் பெற்றுக்கொள்பவரும் மேற் பார்வையிடும்விதத்தில் மாநி லத்திற்கு அந்த நிதி வரவேண் டும். மாநில அரசே அந்த புன ரமைப்பு வேலைகளைச் செய்ய வேண்டும்."

திரு. எஸ். பாலசுப்பிரமணி யம் பேசுகையில், புனரமைப் புக்கான நிதி பொது ஸ்தாப னங்கள்மூலம் வழங்கப்பட மேண்டும் என்ருர்.

## வடக்குகிழக்கில்

[1-ம் பக்கத் தொடச்சி]

வும் போராளிகள் குழுக்களைச் சேர்ந்த சுமார் 200 பேர் வரை யில் இந்திய சமாதானப் படை முகாம்களிலும் பொலிஸ் நிலை யங்களிலும் தஞ்சமடைந்துள் ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இந்திய - இலங்கை இராணு வத்தினரின் கூட்டு நடவடிக்கை களையடுத்து நேற்று இப்பகுதி களில் எதுவித அசம்பாவிதங்க ளும் இடம்பெறவில்லையென வும் நிலைமை கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவரப்பட்டுள்ள தாகவும் பொலிசார் தெரிவித் துள்ளனர். (சி)

## சிறைக்கைதிகளை

[1ம் பக்கத்தொடர்ச்சி]

இலங்கை அரசு தமிழ் அரசி ரால் கைதிகளை ஜே. ஆர். — ராஜீவ் ஒப்பந்தத்தின்படி இன் னமும் விடுதலை செய்யாமை எமது சகோதர, சகோதரிகள் சாகுமட்டும் உண்ணுவிரதப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகிருர்கள் என்பதைஅறிந்து அதிர்ச்சியடைந்துள்ளோம். இலங்கை-இந்திய ஒப்பந்தத் திற்கு மாருக செயல்பட்டவர் களையும் எமது அரசியல் கைதி களுடன் சேர்த்து அடைத்து வைத்திருப்பதாக எமக்கு தக வல் கிடைத்துள்ளது. இது இலங்கை அரசுகவனமாகமேற் கொண்டுள்ள ஒருமோசடி நட வடிக்கையாகும். பயங்கரவா தத் தடைச் சட்டம், அவசர காலச் சட்டங்களின்கீழ் கைது செய்யப்பட்டவர்கள், அல்லது நீதிமன்றங்களில் நிறுத்தப்பட் டுள்ளவர்கள் விடுதலைசெய்யப் படுவர் என்ற ஒப்பந்தச் சரத் துக்களுக்கு முரணுன நட வடிக்கையாகும் இது. இதற்கு எதிராக சிறைச்சாலையிலுள்ள வர்கள் நடத்திவரும் சாகும் வரை உண்ணுவிரதப்போராட் டமும் அரசினுல் உதாசீனம் செய்யப்பட்டுள்ளது இது மனித உரிமை மீறல் என்றே நாம் கருதுகின்ருேம்" என அவ்வறிக்கை கூறுகின்றது

## தலைவர் விஜயம்

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை தேசிய கூட் டுறவு சபைத் தலைவர் எம் ஆர். பி. தஸ்வத்த, செயலா ளர் எம். வி. தர்மகுணவர்த் தன ஆகியோர் இன்று யாழ்ப் பாணத்துக்கு விஜயம் செய்ய வுள்ளார்கள்.

## அரச

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் நடைபெறும்" என்று தமிழீழப் புலிகள் விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகள், வாகனப் போகுவரத்துக்கள், பாடசாலை கள், கூட்டுறவுச் சங்கக்கடை கள் தவிர்ந்த அனைத்து அரச அலுவலகங்களின் செயற் பாட்டை தடுத்து நிறுத்துமுக மாக, இவற்றின் முன்பாக தொடர்ச்சியான மறியற் போராட்டம் நடைபெறும். மறியற்போராட்டம் நடக்கும் அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினர் குடாநாடெங்கும் பாதயாத் திரையை மேற்கொள்ள தீர் மானித்துள்ளனர்" என்று மேற்படி அறிக்கை கூறுகிறது

## மகாவலி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டங்களின் பிரஜைகள் குழுக் கள் ஊர்ஜிதம் செய்துள்ளன ராம்.

வெலிகந்தவில் ஆரம்பிக்கப் பட்டுள்ள இத்திட்டத்தில் 2,500 சிங்களக்குடும்பங்கள் இதுவரை குடியேற்றப்பட் டுள்ளன. மேலும் பலர் இங்கு குடியேற்றப்படுவதற்கான நட வடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுவருவதுடன் ஆதார சேவைகளும் ஏற்படுத்தப்பட் டுள்ளன.

இதனையடுத்து திருமலை மாவட்டத்தில் கந்தளாயி லிருந்து அருத்ஓயா வரையும் கித்துளுத்துவ [கித்துல்ஊற்று] பாலம்கட்டாறு முதல் முள் ளிப் பொத்தானைவரை வீதி யின் இரு பகுதிகளிலும் கட வானை புதுக்குடியிருப்புஆகிய பகுதிகளிலும் தீவிரசிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப் பட்டுவருகிறது.

முல்லைமாவட்டத்தில் வெலி ஓயா விசேடதிட்டத்தின் கீழ் 3000 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. இவர்களுக்கென வைத்திய சாலை, பாடசாலைசுள் கமநல சேவைத்திணைக்களம் போன்ற சேவைகளும் ஏற்பட்டுள்ளன.

திருமலை மாவட்டத்தில் அல்லை கந்தளாய் பகுதியில் பிரதமர் பிரேமதாசாவின் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் 5000 வீடுகள் அமைக்கப்பட்டு சிங்களவர் குடியேற்றப்பட் டுள்ளனர்.

## ஆயுதங்களையும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது தமிழ்ப் போராளி குழுக்களிடையே இடம்பெற்று வரும் மோதல்கள்குறித்து இந் தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி நேற்றுபுதுடிலியில் கூட் டமொன்றைக் கூட்டியிருந் தார்.

இக்கூட்டத்தில் இந்திய அரசின் சிரேஷ்ட அமைச்சர் கள் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கூட் டமுடிவில் இதில் கலந்து கொண்ட இந்திய அரச உயர் அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டபோதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

## சிறைக்கைதிகளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றத்தினரால் (கைஸ்) நேற்று பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வல மொன்று யாழ். நகரில் நடத் தப்பட்டது.

யாழ் பல்கலைக்கழக முன்ற லில் இருந்து நேற்றுக் காலை 10-30க்கு ஆரம்பமான இவ்வூர் வலத்தில் யாழ் மாவட்டத்தி லுள்ளஇருபத்தேழுபாடசாலை களின்மாணவர்கள பெருமள வில் கலந்து கொண்டனர்.

மாணவர் இளைஞர் பொது மன்றத்தினரால் தனித்துவ மாக நடத்தப்பட்ட இந்த ஊர்வலம் அவர்களின் முதலா வது எழுச்சி ஊர்வலமாகும்.

இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட பாடசாலை மாணவ, மாணவிகள் வெள்ளை நிறச் சீருடையும் கறுப்புப் பட்டி யும் அணிந்திருந்தனர்.

யாழ். பல்கலைக்கழக முன்ற லில் இருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம், சேர் பொன். இராமநாதன் வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி வழி யாக யாழ் ஆஸ்பத்திரிச் சந் தியைவந்தடைந்து ஆஸ்பத் திரி வீதி, கண்டி வீதி வழியாக யாழ். செயலகத்தைச் சென்ற டைந்து அங்கு பொதுக்கூட்ட மொன்று நடைபெற்றது.

சுமார் மூன்று மணித்தியா லங்கள்வரை நீடித்த இந்த ஊர்வலத்தில் மாணவர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கி கோஷங்களை எழுப்பிய வண் ணம் சென்றனர்.

ஊர்வலத்தில் எழுப்பப் பட்ட கோஷங்கள் வருமாறு:-

* "அரசியற் கைதிகளை விடு தலை செய், * மகஸீன் என்ன கொலைக்களா? * ஜே. ஆரின் நோபல் எம்மவர்க்கு நோகல், * கைதிகளை விடுதலைசெய்து பாதுகாப்பை உறுதிப்படுத்து, அரசியற் கைதிகளைத் துன் புறுத்தாதே, கொழும்பில் ஒப் பந்தம் வெலிக்கடையில் நிர்ப் பந்தம், * கைதிகளின் அடிப் படைத் தேவைகளை நிறை வேற்று, * சிங்களக் குடியேற் றத்தை நிறுத்து! * மாணவர் சக்திமாபெரும் சக்தி! (வா)


### கடைசி நேர வரிவிளம்பரம்

#### தேவை

கராஜ் ஒன்றில் வேலை செய் வதற்கு டிங்கர் வேலையும் மற் றும் சகல வாகனங்களும்வேலை செய்வதற்கும் ஆட்கள் தேவை 19-9-87க்கு முன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 1197, மே/பா, ஈழநாடு,யாழ்ப் பாணம். (சி-1197)

#### விற்பனைக்கு

புடவைக் கடைக்குத்தேவை யான அலுமாரிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. ஜெயகுமார், மே/பா, சிவ ராமலிங்கம் மாஸ்டர், (சசி காமன்ஸ் அண்மையில்), உடு வில் ரேட், சுண்ணுகம். (சி-1203)


### 31-ம் நாள் சபிண்டீகரண அந்தியேட்டி அழைப்பு



**திரு. கதிர்காமு தம்பு**

(கட்டுவன் தம்பு) [குப்பிழான்].

சகல செல்வமும் பெற்று நூற்றியொரு ஆண்டுகள் பூரண வாழ்வு வாழ்ந்து எல்லோரது மனதிலும் பதிந்தவரான திரு. க. தம்பு அவர்களின் அந்தி யேட்டிக் கிரியைகள் (17-09-87) வியாழக் கிழமை அவரது ஏக புத் திரன் திரு. த. தரும லிங்கம் அவருடைய இல்லத்தில் ஆத்மஜோதி திரு. நா. முத்தையா அவர்களின் தலைமையில் ஆத்மா சாந்திப்பிரார்த் தனைக் கூட்டமும் ஆரம் பமாகும், உற்ருர், உற வினர், நண்பர்கள் அனை வரையும் பிரார்த்தனையி லும் மதிய போசனத்தி லும் கலந்து கொள்ளு மாறு அன்புடன் அழைக் கின்ருேம்.

த. தருமலிங்கம்,
குடும்பத்தினரும்,
சகோதரிகளும்.

செந்திநாதையர் வீதி,
குப்பிழான்,
ஏழாலை கிழக்கு,
சி-1200 ஏழாலை.

### அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பும் 31-நாள் நினைவஞ்சலியும்



**Dr. N. சண்முகநாதன்**

தோற்றம்: 20-10-1924
மறைவு: 17-08-1987

67, ஆசிர்வாதப்பர் வீதி, நல்லூர் கிழக்கை சேர்ந்த எங்கள் குடும்ப விளக்கு அமரர் Dr. N. சண்முகநாதன் அவர்க ளின் அந்திமக்கிரியை யில் கலந்துகொண் டோருக்கும் மலர்வளை யம் சாத்தியோர், அனு தாபச்செய்தி அனுப்பி யோர் யாபேருச்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித் துக் கொள்கிருேம். இன்று 16-9-1987 புதன்கிழமை நடைபெ றும். அவரது அந்தி யேட்டிக் கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரை யும் அன்புடன் அழைக் கிருேம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்
பிள்ளைகள்.
67, ஆசீர்வாதப்பர்வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
[சி 1205]


### தேவை

கணேசன்ஸ் பிடவைக்கடைக்கு
அனுபவமுள்ள
ஆண் விற்பனையாளர்கள் தேவை.
வயது 18– 30க்கும் இடைப்பட்டவர்கள்
சுன்ணுகம் பகுதியில்
இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
கணேசன்ஸ் பிடவை ஸ்தாபனம்,
இல: 9, சுன்ணுகம். ஏ-1199

### தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள
யாழ் மெடி கிளினிக் & பார்மசி, நல்லூர்
Yarl Medi – Clinic & Pharmacy Nallur) இல்
வைத்தியசாலைக்கு மருந்தகத்தில்
அநுபவமுள்ளவர்கள் தேவைப்படுகிருர்கள்.
அநுபவமுள்ளவர்கள் 20-9-87 [ஞாயிற்றுக்கிழமை]
காலை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையில்
சகல தகுதிச் சான்றிதழ்களுடன்
கீழ்க்கண்ட முகவரிக்கு நேரில் வரவும்.
14, அரசடி வீதி,
[சங்கிலியன் வீதி ஊடாக]
முத்திரைச் சந்தை, நல்லூர்.
[சி-1194]

### வேண்டுகோள்

Zuzuki FR 80, No. 10 Sri 5689

அண்மையில் நடந்த வடமராட்சி இராணுவ நட வடிக்கையின் போது மேற்கூறிய எனது மோட்டார் சைக்கிள் காணுமல் போய்விட்டது. தயவுசெய்து வைத்திருப்பவர்கள் / தகவல் தெரிந்தோர் கீழ்வரும் விலாசத்திற்கு தெரிவிக்குமாறு அன்புடன் வேண்டு கிறேன். தகுந்த சன்மானம் தரப்படும்.

N. Ramachandran, C/O, N. Vijayaratnam,
S. P. M., Nellandai,
Point-Pedro. (சி 1204)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

புதன்கிழமை 16-9-87

## சிங்களக் குடியேற்றத்தை ஆட்சேபித்து
# முல்லைத்தீவில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

# ஹர்த்தால்!

[ஒட்டுசுட்டான்]

சிங்களக் குடியேற்றற்தை ஆட்சேபித்து முல்லைத்தீவு நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும், ஹர்த்தாலும் நேற்று இடம்பெற்றது.

வட்டுவாகல், செல்வபுரம், கோயில்குடியிருப்பு, மண்குடியிருப்பு, வண்ணான்குளம், உண்ணாப்பிலவு, கள்ளப்பாடு, சிலாவத்தை ஆகிய இடங்களிலிருந்து ஆரம்பமான ஊர்வலங்கள் முல்லைத்தீவு சென். பீற்றேஸ் ஆலயத்தில் ஒன்றுகூடி, அங்கிருந்து பெருந்தொகையான பொதுமக்களின் ஆதரவுடன் நகரின் பிரதான வீதிவழியாகக் கச்சேரிக்குச் சென்று அங்கு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து இந்திய சமாதானப் படை முகாமிற்குச் சென்று மகஜரொன்றும் கையளித்தனர்.

## கரையொதுங்கிய சடலம்

[யாழ்ப்பாணம்]

நெடுந்தீவு வடமேற்கு கடலில் இனந்தெரியாத சடலம் ஒன்று நேற்று கரையொதுங்கியது. (ஓ)

## இறுதிப் பேச்சுக்கள் இவ்வாரம்

[கொழும்பு]

வடக்கு கிழக்கில் அமையும் இடைக்கால நிர்வாகத்தின் அதிகாரபரவலாக்கம் தொடர்பாகவும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் இந்திய-இலங்கை அதிகாரிகளிடையே இவ்வார இறுதியில் கொழும்பில் 3ம் கட்டஇறுதிப் பேச்சுக்கள் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்கட்ட பேச்சுக்கள் கடந்த ஆகஸ்ட் 19ம் திகதி புதுடில்லியிலும் கொழும்பிலும் செப்டெம்பர் 2ம் திகதி நடைபெற்றது. [சி]

## இந்தியப் படை மதிப்பீட்டு அறிக்கை

புதுடில்லி செப் 15

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தமிழ்ப்போராளிக் குழுக்களிடையே ஏற்பட்டுள்ள மோதல்கள் குறித்து இந்திய அரசாங்கத்துக்கு இலங்கையில் உள்ள இந்திய அமைதிப்படை மதிப்பீட்டு அறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவக்கப் பட்டுள்ளது.

இந்திய அரசு கேட்டுக் கொண்டதன் பேரிலேயே இந்த அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புஷ்பராசா மர்ம மரணம்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக நூலகத்தில் கடமையாற்றி வந்த புஷ்பராசா [30 வயது] என்பவர் நேற்றுமுன்தினமிரவு மர்மமான முறையில் இறந்துள்ளார்.

கூரிய ஆயுதமொன்றினால் காது துளைக்கப்பட்ட நிலையில் இவரதுசடலம் கோண்டாவிலிலுள்ள கிணறுஒன்றில் கண்டெடுக்கப்பட்டு யாழ்ப்பாதனை வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டது. (ஓ)

## பொறுப்பாளராக பிரசாத்

[யாழ்ப்பாணம்]

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியற்பிரிவு பொறுப்பாளராக புலிகள்இயச்க அரசியற் பிரிவைச்சேர்ந்த திரு. பிரசாத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் திரு. இ திலீபன் சாகும்வரை உண்ணாவிரதத்தைநேற்றுமுதல் மேற்கொண்டமையைத் தொடர்ந்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [வா]

## யாழ். நகரில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். கஸ்தூரியார்வீதியில் அமைந்துள்ள 'ரதி வாச் வேக்ஸ்சும் அதன் ஸ்ரோரிலும் கடந்த ஞாயிறு இரவு உடைக்கப்பட்டு பல பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது தித்துவதற்காக கொடுக்கப்பட்டிருந்த சுமார் 60 மணிக்கூடுகளும் விற்பனைக்காகவிருந்த பல மணிக்கூடுகளும், எலக்ரோனிக் பொருள்களும்,சில்வர் சாமான்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## அனைத்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மோதல்களினால் வடக்கு-கிழக்கு இணைப்பில் ஏற்படவிருக்கும் பாதிப்புகள் பற்றி இவ் அதிகாரிகள் குழு போராளிகளுக்கு அறிவுறுத்துமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி]

## மரண அறிவித்தல்

### திருமதி பத்மாவதி சண்முகராசா

குரும்பசிட்டியைச் சேர்ந்த திருமதி பத்மாவதி சண்முகராசா காலமானார். இவர் சண்முகராசா [சந்திர நிலைய சோதிடர் குரும்பசிட்டி] அவர்களின் அன்பு மனைவியும், சற்குணநந்த ஸ்ரீஸ்கந்தராசா, குமாரகுரு குலசிங்கம், நிர்மலாதேவி, சந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், விக்னேஸ்வரன், மீனலோஜனா, மீராதேவி ஆகியோரின் மாமியாரும், பிரகாஷ், ஷைலினி, சுபாஷினி, மயூரன், கிருஷாந்த், வித்யா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12-09-87 இல் சுன்னாகத்தில் நடைபெற்றது.

தகவல்: S. S. சண்முகராசா.
K. K. S. வீதி,
சுன்னாகம்.
[சரவணாஸ் ஸ்ரோர்க்கு முன்] [சி-1180]

### திருமதி நகுலாம்பிகை மதியாபரணம்

திருமதி நகுலாம்பிகை மதியாபரணம் சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற மதியாபரணத்தின் அன்பு மனைவியும், ஞானம்பிகை, காலஞ்சென்ற கனகசபை. பாலாம்பிகை, பகீரதன் (U K.], வரதலஷ்மி, சுபத்ராதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், நடேஸ்வரன், வாமதேவி, சிதம்பரநாதன், பாலயோகினி [U.K ], பகீரதன் ஆகியோகிரின் அன்பு மாமியாரும் ஆவார். இறுதிக்கிரியைகள் 15-9-87 செவ்வாய்க்கிழமை அன்று கனத்தை மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள்.

22/1, அலெக்சான்ரு ரோட், வெள்ளவத்தை.

தகவல்: நடேஸ்வரன் பரதன்,
55, ருத்ரா மாவத்த,
கொழும்பு-6
எ-2262

### ஜேயரெட்ணம் நாகேஸ்வரி



30/13, மூத்தவிநாயயர் வீதி, கச்சேரி நல்லூர் ரோட்டைச் சேர்ந்த நாகேஸ்வரி அகால மரணமானார். அன்னார் காலஞ்சென்ற ஜேயரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், சுந்தரலட்சுமி [ஜேர்மனி] திரவியலட்சுமி [ஜேர்மனி] ஜெயலலிதா[ஜேர்மனி] ஜெயசீலன், ஜெயச்சந்திரன், ஜெயரஞ்சினி, சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மநாதன், கணேசமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியும், மகேஸ்வரி, சாந்தலிங்கம் [கட்டிட ஒப்பந்தகாரர்] மகாலிங்கம் [ஜேர்மனி] அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 15-09-1987 ல் செம்மணி மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
திரவியலட்சுமி [மகள்]
[சி 1207]



நேற்று யாழ். நகரில் மாணவர் இளைஞர் பொதுமன்றத்தின் [கைஸ்] ஆர்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்ட மாணவரில் ஒரு பகுதியினரை முதல் படத்திலும், கைஸின் 'வெலிக்கடைப் போராட்டக் குழு' தலைவர் திரு. நந்தனும், மாணவர் பிரதிநிதி ஒருவரும் உரையாற்றுவதை 2-ம், 3-ம் படங்களிலும் காணலாம். படங்கள்: பசந்தில்

## உயிர்ச்சேதங்களை தவிர்ப்பது அமைதிப்படையின் பொறுப்பு
### சென்னையில் கேதீஸ்வரன் அறிக்கை

சென்னை, செப் 15

"இலங்கையிலுள்ள தமிழ்ப் போராளிகள் குழுக்களின் மோதல்களில் உயிர்ச்சேதங்கள் ஏற்படுவதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு இந்திய அமைதிப்படைகளைச் சார்ந்தது'' என்று ஈழமக்கள் புரட்சிகர அமைப்பின் ஈ.பி.ஆர். எல்.எவ். பிரமுகர் திரு. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சென்னையிலிந்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர்இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமது இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள் பலர் இந்த மோதல்களில் பாதிச்கட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்

### புலிகள் விளக்கம்

இதேவேளை சென்னையிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் [எல்.ரி.ரி.ஈ.] விடுத்துள்ள அறிக்கையொன்றில் தமது இயக்கம் எதுவித மோதல்களிலும் ஈடுபடவில்லை என்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத் தலைவரை தாம்தாக்கவில்லைஎனவும் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone: — 22389, 24126.

## உண்ணாவிரதப் போரார்ட்டம்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வரை உண்ணாவிரதமாகும்.

இந்த உண்ணாவிரதப்போராட்டத்தை தமிழீழவிடுதலைப் போராட்டத்தை பிரதித்தலைவர்திரு. மாத்தயா தொடக்கி வைத்தார்.

உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ள திரு. திலீபனுக்குஆதரவு தெரிவித்து தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப்பிரமுகர்களாள நடேசன், பிரசாத் வாஞ்சிநாதன் காசிஆனந்தன் ஆகியோரும் உண்ணாவிரதப்பந்தலில் அமைக்கப்பட்ட மேடையில் திரு. திலீபனுடன் காணப்பட்டனர்.

மேடைபந்தலுக்கு இடது பக்கத்திலும் முன்பக்கமாகவும் விடுதலைப்புலிகள் போராளிகள் இயக்க ஆதரவாளர்களும், பொதுமக்களும் உண்ணாவிரதத்திற்கு ஆதரவளித்து அமர்ந்திருந்தனர்.

உண்ணாவிரதத்திற்கு ஆதரவுதெரிவித்து அங்குகுழுமியிருந்த மக்கள் மத்தியில் தமிழீழவிடுதலைப் புலிகளின் போராட்ட கால தியாக வரலாறு மற்றும் இலங்கை இந்திய ஒப்பந்தம் பற்றி சட்டத்தரணி திரு. சிவசுப்பிரமணியம் திரு. இராசேந்திரம் உட்படப் பலர் விளக்கவுரை ஆற்றிக்கொண்டிருந்தனர்.

உண்ணாவிரதப் பந்தலைச் சுற்றி புலிச்சின்னம் தாங்கிய கொடிகள் காணப்படுகின்றன.

"சமூக விரோத சக்திகளுக்குத் துணைபோகாதீர்கள்'' சிறைக்கைதிகளை விடுதலை செய் போன்ற பல சுலோக அட்டைகளும் அங்கு கட்டப்பட்டிருந்தன.

உண்ணாவிரதத்திற்குஆதரவு தெரிவிதது அங்கிருந்த மக்களுக்கு சீருடை அணிந்த புலிச் சின்னம் தாங்கிய ஆண்தொண்டர்களும் பெண் தொண்டர்களும் நீராகாரம் வழங்குவதில் ஈடுபட்டிருந்தனர்.

உண்ணாவிரதம்நடைபெற்றுகொண்டிருக்கும் நல்லூர்கந்தசாமி கோவில் வீதிகளின் போக்கு வரத்துக்கு தடை செய்யப்பட்டிருந்தன வாகனப் போக்குவரத்துக்குத்தடை செய்யப்பட்ட வீதிகளின் சந்திகளில் பாடசாலைமாணர்கள் புலிச்சின்னம் பதித்த பட்டிகளை அணிந்திருந்தார்கள்.

சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் திரு. திலீபனை யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ வீ கே சிவஞானமும் சென்று பார்வையிட்டார். (வா)